பொது சன நூலகம்
28 JAN 1997

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 தை 15 செவ்வாய்க்கிழமை (28-01-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 62

# தெற்கு உள்ளூராட்சி தேர்தல்: தமிழ்க் கட்சிகள் பங்குபற்றா!

## ஒதுங்கியிருக்க முடிவு

கொழும்பு, ஜனவரி 28

வடக்கு கிழக்குக்கு வெளியே தென்னிலங்கையில் மார்ச் மாதத்தில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் சம்பந்தப்படாமல் ஒதுங்கியிருக்கவே தமிழ்க் கட்சிகள் விரும்புவதாகத் தெரிகின்றது.

கொழும்பு மாநகரசபைக்கான தேர்தலில் கணிசமான எண்ணிக்கையான தமிழர்கள் வாக்களிக்க இருக்கின்ற போதிலும் -

அவர்கள் முன்னிலையில் தங்கள் கருத்தை வைக்காமல் ஒதுங்கியிருக்கவே தமிழ்க்கட்சிகள் விரும்புவதாகக் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

''பொதுமக்கள் ஐக்கிய முன்னணி முன்வைத்திருக்கும் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை நிறைவேற்றுவதற்கு ஆளும் கட்சி மற்றும் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சி ஆகிய இரண்டி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப இந்த ஆண்டிலே யுத்தம் முடியும் எண்ட வாக்குறுதியும் காற்றிலே......?

## மீசாலையில் கண்ணிவெடி!

மீசாலைப் பகுதியில் கால்நடையாக ரோந்து சென்ற படையினர் கிளைமோர் கண்ணி வெடியில் சிக்கினர். இந்தச் சம்பவத்தில் ஒரு படைவீரர் கொல்லப்பட்டார்; மற்றுமொருவர் காயமடைந்தார். காயமடைந்தவர் பலாலி தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விடுமுறையைக் கழிக்கச் சென்ற படையினர் மீது தாக்குதல்

### உதவிக்கு வந்த டிரக் கண்ணியில்

கொழும்பு, ஜன. 28

புலிகள் நடத்திய தாக்குதலில் மாதுறு ஓயாவில் இராணுவத்தினர் ஒருவர் கொல்லப்பட்டார்.

நேற்றுக்காலை 6.00 மணி அளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

விடுமுறையைக் கழிக்கச் சென்ற இராணுவத்தினர் மீதே புலிகள் தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதிக்கு உதவிக்கு வந்த படையினரின் டிரக் ஒன்றும் கண்ணி வெடியில் சிக்கியது.

இதில் இரு இராணுவத்தினர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

(இ-5)

## சட்டவிரோதமாக குடியேற முயன்ற 78 இலங்கையர் இத்தாலியில் கைது

கொழும்பு, ஜன. 28

இத்தாலிக்குள் சட்டவிரோதமாக நுழைய முயன்றதாக மேலும் 78 இலங்கையர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள் என்று இத்தாலியில் உள்ள இலங்கைத் தூதரகம் இலங்கை வெளிநாட்டமைச்சுக்கு அறிவித்துள்ளது.

இவர்களிடம் பயணக் கடவுச் சீட்டுக்களோ அல்லது வேறு எந்தவித தஸ்தாவேஜுக்களோ இருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் தற்போது இத்தாலியில் உள்ள அகதிமுகாமொன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனார்கள் என்று வெளிநாட்டமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையர்கள் உட்பட 154 வெளிநாட்டவர்கள் ஒரு குழுவாக இத்தாலிக்குள் நுழைய முற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

சமீபத்தில் கிறீஸில் இருந்து 29 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டது தெரிந்ததே. (இ-4)

## திருகோணமலையில் போயா தினம் சந்தையை இழுத்து மூடினர்!

### குத்தகை விவகாரம் சூடுபிடிப்பு

திருகோணமலை, ஜன. 28

திருகோணமலை நகரசபையின் சந்தை குத்தகை விடும் விவகாரம் மேலும் 'சூடு' பிடிக்கத் தொடங்கியிருக்கின்றது.

நகரசபை இந்தச் சந்தையை தமிழர் ஒருவருக்குக் குத்தகைக்குக் கொடுத்ததும் —

திருமலை இராணுவத் தளபதி அவசரகாலச் சட்டத்தின் கீழ் தனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்தக் குத்தகை அனுமதியை ரத்துச் செய்ததும் தெரிந்தவையே.

அந்தச் சந்தையை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்போர் கடந்த வியாழனன்று — போயா தினத்தன்று — திடீரென சந்தையைப் பூட்டி அதனை இயங்காமல் செய்து விட்டனர்.

பௌத்தர்களுக்கு புனித நாளான போயா தினத்தில் சந்தையை மூடி விடுவதே அவர்கள் நோக்கம் என்று கூறப்பட்டது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.ஆர்.எல்.எவ் அலுவலகம்

யாழ்ப்பாணம், ஜன. 28

1990 ஆம் ஆண்டு முற்பகுதிக்குப் பின்னர் மீண்டும் யாழ்ப்பாணம் வந்திருக்கும் ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பினர் தற்போது யாழ். ஆஸ்பத்திரி வீதியில் — ஆஸ்பத்திரிக்கு முன்பாக — முன்னர் பள்ளிவாசல் ஒன்று அமைந்திருந்த பகுதிக்கு அருகில் வீடு ஒன்றில் தங்கி செயற்பட்டு வருகின்றனர்.

கடந்த நான்காம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வந்த ஈ. பி. டி. பியினர் யாழ். ஸ்ரீதர் தியேட்டரில் அலுவலகம் ஒன்றைத் திறந்து செயற்படுவதும்—

தைப்பொங்கலுடன் யாழ். வந்து சேர்ந்த ''புளொட்''

( 8ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு தொலைபேசி சேவை மீண்டும் வழமை நிலையில்

### நேற்று முதல் மீண்டும் இயங்குகிறது

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிநாடுகளுக்கான தொலைபேசி அழைப்புச் சேவை நேற்றுப் பிற்பகல் முதல் மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளது.

'ரெலிகொம்' லிமிட்டெட்டின் யாழ். மாவட்டப் பரிசோதகர் இத்தகவலைத் தெரிவித்திருந்தார்.

இந்தத் தொலைபேசிச் சேவை கடந்த இரு தினங்களாகத் தடைப்பட்டிருந்ததால் யாழ். வேம்படி வீதியில் உள்ள வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்புச் சேவை நிலையத்தின் பணி பாதிக்கப்பட்டிருந்தது.

(உ)

## திருமலையில் நிலைமை மோசம் எனத் தெரிவிப்பு

திருகோணமலை நிலைமை தொடர்பாக 'த ஐலண்ட்' பத்திரிகை தனது ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:-

திருகோணமலை நகர சந்தை குத்தகை விவகாரம் திருமலையை எரிமலையாக்கும் நிலைக்குத் தள்ளிச்சென்றிருக்கின்றது.

தமிழர், முஸ்லிம், சிங்களவர் சமமான எண்ணிக்கையில் வசிக்கும் திருமலையில் நிலைமை அபாயகரமாகிவிடும் போல் தெரிகின்றது.

இன ஒற்றுமையை விரும்புவோர் அரசு இவ்விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு நிலைமையை சீராக்க வேண்டும் என விரும்புகின்றனர்.

திருகோணமலையில் அடிவானத்தில் கரும் முகில்கள் திரள்வதை கொழும்பில் அவதானிகள் காண்கின்றனர்.

பதற்றத்தைத் தணிக்க

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் பயணிகளுக்கு

யாழ்ப்பாணம், ஜன. 28

திருகோணமலைக்குக்கப்பலில் செல்வதற்கு பெயர்களைப் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 199 ஐச் சேர்ந்தோர் நாளை நடைபெறும் கப்பல் சேவை மூலம் திருகோணமலை செல்ல முடியும் என்று அறிவிக்கப்படுகின்றது.

பட்டியல் இலக்கம் 199 ஐச் சேர்ந்தோர் நாளை நடைபெறும் கப்பல் சேவையைப் பயன்படுத்தத் தவறினால் —

மீண்டும் கப்பலில் செல்வ

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விமானங்கள் பறக்கும் நேரம் 97 இல் மேலும் அதிகரிக்கும்

### விமானப் படைத்தளபதி கூறுகிறார்

கொழும்பு, ஜன. 28

1954 ஆம் ஆண்டில் இலங்கை விமானப் படையின் விமானங்கள் மொத்தம் 225 மணித்தியாலங்களே பறந்தன. 1970 ஆம் ஆண்டில் இது இரண்டாயிரத்து 720 மணித்தியாலங்களாக உயர்ந்தது. 1990முதல் 1994 ஆம் ஆண்டுகளில் இது அதிகரித்து 16 ஆயிரம் மணித்தியாலங்களாகக் கூடியது. ஆனால் 1996 இல் இது 22 ஆயிரம்மணித்தியாலங்களாக அதிகரித்திருக்கின்றது 1997 இல் இது மேலும் கூடும்.

— இவ்வாறு கொழும்புப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய அறிவித்தல்

யாழ். மாவட்டத்தில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசிற் பரீட்சையில் 160புள்ளிகளுக்கு மேல் எடுத்த மாணவர்களை கௌரவித்து வங்கி ஊடாக அன்பளிப்புச் செய்யவுள்ளோம். பெற்றோர்கள் எங்கள் கழகத்துடன் 01-02-1997 க்கு முன் தொடர்பு கொள்ளவும். பிள்ளைகளின் பிறப்புச்சான்றிதழ் போட்டோஸ்ரட் பிரதியை (1) கொண்டு வரவும்.

பா. லிங்கநாதன் (செயலாளர்),
யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.
221, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (44954)

# நன்றி கூறுகின்றோம்

23-01-1997 இல் கப்பல் பயணிகளுடன் வந்தபஸ்ஸில் எம்மால் தவறவிடப்பட்ட கைப்பையை விடுதேடி ஒப்படைத்த பஸ் சாரதி திரு. S. தங்கவடிவேல், நடத்துனர் திரு. N. நவரெத்தினராஜா ஆகியோருக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

-- திரு. திருமதி S. B. காசிநாதன்,
(44960) சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

1996 ஆம் ஆண்டு நடைபெற்ற
5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில்
பரீட்சையில்
யாழ். நயினாதீவு
ஸ்ரீநாகபூஷணி வித்தியாலய மாணவர்களான
தில்லைநாதன் ரஜிந்தன் — 123 புள்ளிகளும்
வீரவாகு புஸ்பராஜ் — 99 புள்ளிகளும்

பெற்றுச் சித்தியடைந்துள்ளார்கள். பல வருடங்களுக்குப் பின்னாக பாராட்டுதலுக்குரிய பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்ட மேற்படி மாணவர்களையும் இம்முயற்சிக்கு அயராதுழைத்த அதிபர் திரு. சி. வை. சபாரெத்தினம் அவர்களையும், உதவி ஆசிரியர்களையும் பாராட்டுவதிலும் வாழ்த்துவதிலும் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சபையினரும்
(9207) பழைய மாணவர் சங்கத்தினரும்.

# பாராட்டுகின்றோம்

யா/கல்வயல்
ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்
ஆண்டு-5 புலமைப் பரிசிற்பரீட்சை-1996
இப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களான

| | | | |
|---|---|---|---|
| 1. | அ. செந்தூரன் | 128 | புள்ளிகள் |
| 2. | பா. நிஷாந்தன் | 128 | ,, |
| 3. | த. கனலயரசி | 128 | ,, |
| 4. | க. செல்வசுயந்தினி | 108 | ,, |
| 5 | சு. அகிலன் | 106 | ,, |
| 6 | மு. சங்கீதா | 103 | ,, |

ஆகிய மாணவர்களையும் இவர்களை ஊக்குவித்த அதிபர், வகுப்பாசிரியர் மற்றும் ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

★ பரீட்சையில் தோற்றியோர் — 10
சித்தியடைந்தோர் — 06
சித்தியடைந்த வீதம் — 60%
என்பது குறிப்பிடத்தக்கது.

பாடசாலை அபிவிருத்திச் சபையினர்,
யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்.
(44953)

# கேள்வி அறிவித்தல்

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம், வலயம் 01

தேசிய பாடசாலைகள்-
யா/ யாழ் மத்திய கல்லூரி,
யா/வேம்படி பெண்கள் உயர் பாடசாலை.

97-1-19 ஆம் திகதி உதயன் இதழில் பிரசுரமாகிய கேள்வி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள இரு தேசிய பாடசாலைகளின் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் வழங்கும் திகதி 97-02-03 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரையும் கேள்விப் பத்திரங்களை ஏற்கும் திகதி 97-02-19 ஆம் திகதி முற்பகல் 10.00 மணி வரையும் கேள்விப் பத்திரங்களைத் திறக்கும் திகதி அன்றைய தினமே முற்பகல் 10.30 மணிவரையும் நீடிக்கப்பட்டுள்ளதென்பதனை அறியத் தருகின்றேன்.

நா. சுந்தரலிங்கம்,
கல்விப்பணிப்பாளர்,
யாழ். வலயம் - 01.

கல்வித்திணைக்களம்,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
97-01-27 (சி/13)

## மீண்டும் இயங்குகிறது

கடந்த பல வருட காலமாக இயங்காதிருந்த பண்டத்தரிப்பு தாய் சேய் சிகிச்சை ஆரம்ப சுகாதார நிலையம் இம்மாதம் தொடக்கம் பண்டத்தரிப்பு—சண்டிலிப்பாய் வீதியிலுள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கத் தொடங்கியுள்ளது. (உ-135)

## ஓய்வூதிய வவுச்சர்கள்

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி ஓய்வூதியம் பெறுபவர்களின் ஜனவரி மாதத்துக்குரிய ஓய்வூதிய வவுச்சர்களும் காசோலைகளும் யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவினரால் அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (இ-100)

## ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் ஆராதனை விழா

கொழும்புத்துறை, ஜன. 28
யாழ். பல்கலைக்கழக கவின்கலை மன்றத்தினர் நடத்தும் சங்கீதசற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் ஆராதனை விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு மருதனார் மடத்தில் உள்ள யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக மண்டபத்தில் நடைபெறும்.

இவ்வைபவத்தில் இசை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (இ-30)

## நீர்கொழும்பில் மோதல்

கொழும்பு, ஜன. 28
நீர்கொழும்பில் இருகோஷ்டிகளுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் பலர் சிறு காயங்களுக்கு உள்ளானார்கள். பல சேரிவீடுகளும் நாசமாகின.

பொலிஸார் தலையிட்டு நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தனிப்பட்ட காரணங்களினாலேயே நேற்று முன்தினம் நள்ளிரவில் இந்த மோதல் மூண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

## ஆஸித்தூதுவர் நம்பிக்கை

கொழும்பு, ஜன. 28
'சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலமே ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். இன்றைய இலங்கை நிலைமைகளை நாம் உன்னிப்பாகக்கவனித்து வருகின்றோம்.''

இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் டேவிட் கியூட்டி பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டி ஒன்றில்மேற் கண்டவாறு கூறினார். (இ-4)

## விஜேவீராவின் குடும்பம் வெளிநாட்டுக்கு?

மரணமடைந்த ஜே.வி.பி. தலைவர் றோஹண விஜேவீராவின் மனைவி சித்திராங்கனியும் அவரது 4 பிள்ளைகளும் சித்திராங்கனியின் சகோதரரான டாக்டர் சந்திர பெர்னாண்டோவிடம் கையளிக்கப்படவுள்ளனர்.

தற்போது திருகோணமலை கடற்படைத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சித்திராங்கனியையும் பிள்ளைகளையும் சந்திக்க கடந்த வெள்ளிக்கிழமை பாதுகாப்பு அமைச்சு அவருக்கு அனுமதி வழங்கியது.

ஐரோப்பிய நாடொன்றுக்கு செல்வதற்கான கடவுச் சீட்டுகளையும் விசாவையும் ... கையளிக்கப்பட்டுள்ளன என்று தெரியவருகிறது.

# விற்பனையாகிறது

திருக்கணித
பஞ்சாங்க மாதக் கலண்டர்
விலை ரூபா: 50.00
வெளியீடு: திருக்கணித நிலையம்
மட்டுவில் - சாவகச்சேரி.
(44955)

## யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

இல- 111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி சமாசத்தில் பின்வரும் பொருள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு, அரிசி வகை, தேங்காய் எண்ணெய், பாம் ஒயில், உழுந்து, உ. பருப்பு, மஞ்சள், மிளகு, நற்சீரகம், கயிறு வகை, சைக்கிள் ரயர் / ரியூப், மோட்டார் சைக்கிள் ரயர் / ரியூப், அல்கத்தீன் பைப், தீப்பெட்டி, தெளிகருவி வகை, தராசுபடி செற், செத்தல் மிளகாய், கைக்கோ, மாஜா, புளி மற்றும் லீற்றர் கான், சிமாத் தராசு, பிளாஸ்ரிக் வாளிவகை, நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள், புடைவை வகைகள், லாண்ட்மாஸ்ரர் ஆகியவற்றையும் நிதான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்.
(சி/12)

# மரண அறிவித்தல்கள்

## பசுபதி மகேஸ்வரன்

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் திருகோணமலை மாகாண சபை நிதி அமைச்சில் கடமை புரிந்தவருமாகிய பசுபதி மகேஸ்வரன் 24-01-1997 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று திருகோணமலையில் காலமானார்.

அன்னார் இன்பமலரின் அன்புக் கணவரும், மைதிலி [2 ஆம் வருட முகாமைத்துவம், யாழ் / பல்கலைக்கழகம்], துஸ்யந்தி, கவுந்தினி [மாணவி மகாஜனாக் கல்லூரி], அன்பழகன் [அலெக்ஸ்' மகாஜனாக் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் திருகோணமலையில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
ம. இன்பமலர்
(மனைவி)
உடுவில்,
சுன்னாகம். (44956)

## நாதஸ்வரமேதை கார்த்திகேசு சின்னத்துரை

''பிருந்தாவனம்'' அல்வாய் வடக்கை வசிப்பிடமாகக் கொண்ட நாதஸ்வர மேதை சின்னத்துரை அவர்கள் 25-01-97 இல் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் இரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும், இரவிச்சந்திரன் (ஜேர்மனி) அவர்களின் பாசமிகு தந்தையும், சந்திரமணி (சாந்தி) (ஜேர்மனி) அவர்களின் மாமனாரும், கீர்த்தனின் (ஜேர்மனி) அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது தகனக்கிரியைகள் 26-01-97 இல் புதுக்குடியிருப்பு மயானத்தில் நடைபெற்றன என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
கு. இராசரத்தினம்
(சாலன்)
கூத்தாடியம்பதி,
அல்வாய் வடக்கு,
அல்வாய். (9206)

## குமாரவேலு செல்வராசா

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த குமாரவேலு செல்வராசா அவர்கள் 26-01-97 இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேலு - சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மகனும், அரியாலையைச் சேர்ந்த வ. தம்பிப்பிள்ளையின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், சிவப்பிரியா, மகிழாஜினி, அகிலாஜினி, ஜெனகன், கௌசிகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தியாகராஜா, உமாதேவி (சாந்தா), கமலாதேவி, மணிவண்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், த. பஞ்சலிங்கம் (அதிபர், யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை), நாகேஸ்வரி, பாலசுப்பிரமணியம், தியாகலிங்கம், கோசலாதேவி, சோதிலிங்கம், மகாலிங்கம் மற்றும் விஜயகுமார் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27-01-97 அன்று நீர்வேலியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. பஞ்சலிங்கம்
(மைத்துனர்)
காமாட்சியம்பாள் கோயிலடி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (44958)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்ட நிலப்பரப்புகளைக் கைப்பற்றி நிலை கொள்ளும் அரச தந்திரோபாயம்

## பரந்தன் தாக்குதலால் கேள்விக்குறி

**9 - 1 - 97** ஒரு விபரீதத்துக்கான வியாழக்கிழமையின் அதிகாலை மூன்று மணி.

அமாவாசைக்கால பின்னிரவு என்பதால் இருள் போர்வையாக விரிந்திருக்க, மார்கழிக் குளிர் பூமியை ஈரப்படுத்திக் கொண்டிருந்தது.

பரந்தனில் இருந்து கிளிநொச்சிவரை நீண்ட நிலப்பரப்பில் சுமார் பத்து கிலோ மீற்றர் தூரம் நிலைகொண்டிருந்த படையினருடன் காவல் நிலைகள் அமைதியாக இருந்தன.

புயலுக்கு முந்திய அமைதி தான் அது என்பது படையினருக்குத் தெரியா விட்டாலும், பரந்தனின் கிழக்கில் இருந்தும், மேற்குப் பக்கம் இருந்தும் முன்னேறிக் கொண்டிருந்த புலிகளின் அணியினருக்குத் தெரிந்தே இருந்தது.

**2 கட்டமாகத் தாக்குதல்**

கிட்டத்தட்ட இரண்டாயிரம் பேர் கொண்ட புலிகளின் அணிகள் ஊடுருவி அழித்தொழிக்கும் தாக்குதல் ஒன்றுக்காக முன்னேறிச் சென்றன.

தாக்குதல் இரண்டு கட்டமாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

முன்னரங்க காவல் அரண்களைத் தாக்கிக் கைப்பற்றுவது முதற் கட்டம்.

காவலரண்களைத் தாக்கி உள்ளே ஊடுருவும் வழி திறக்கப்பட்டதும், புலிகளின் அதிரடித் தாக்குதல் படையினர் மின்னல் வேகத்தில் உட்பிரவேசித்து தாக்குதலைத் தொடர்வது இரண்டாவது கட்டம்.

ஆனையிறவுக்கும் கிளிநொச்சி நகருக்கும் இடைப்பட்ட மத்திய பகுதி பரந்தன் சந்தி. ஆனையிறவு பிரதான தளத்தில் இருந்து கிளிநொச்சி நகர் வரை இராணுவ வேலியாக படையினர் நீண்டு நிலை கொண்டிருக்கின்றனர். அவ்வாறு நிலை கொண்டுள்ள படையினருக்கு இதயம் போன்றதுபரந்தன்.

பரந்தன் சந்திக்கு முரசுமோட்டை ஊடாக ஒரு பாதையும், பெரிய பரந்தன் குமாரபுரம் வழியாக இன்னொரு பாதையும் செல்கின்றன.

''சத்ஜெய'' (உண்மை வெற்றி) மூன்றாம் கட்ட நடவடிக்கையின் போது முரசுமோட்டை ஊடாகவும், குஞ்சுப் பரந்தன் ஊடாகவும் ஊடுருவி புலிகள் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

அதாவது பரந்தனின் கிழக்குத் திசையில் இருந்தும், மேற்குத் திசையில் இருந்தும் புலிகள் ஊடுருவித் தாக்கியிருந்தனர்.

பரந்தன் முன்னரங்க நிலையிலிருந்து கிளிநொச்சி நகர் நோக்கி முன்னேறிய படைகள் மீதே புலிகள் அப்போது தாக்கினார்கள்.

இம்முறையும் பரந்தனின் கிழக்குப் புறமாக இருந்தும், மேற்குப் புறமாக இருந்துமே புலிகளின் அணிகள் தாக்குதலை ஆரம்பித்தன.

நகர்வுகள் தெரியவில்லை. அதனால் புலிகளின் நகர்வுகளை அவதானித்து பதில் தாக்குதலில் ஈடுபட முடியவில்லை.

காவலரண்களை நோக்கி ஆர். பி. ஜி. லோஞ்சரால் தாக்குவது. காவலரணுக்குள் விழுந்து ரொக்கட் லோஞ்சர் வெடித்ததும் அதையடுத்து சில விநாடிகள் காவலரணுக்குள் உள்ள படையினர் எதுவும் செய்ய முடியாது. மீண்டும் அவர்கள் தாக்கத் தொடங்க

**கொழும்பிலிருந்து வெளிவரும் "தினமுரசு" வார இதழில் "இரு முனைத்தாக்குதல் அழித்தொழிப்பு யுத்தம்" என்ற தலைப்பில் ''நாரதர்" எழுதிய "எக்ஸ்ரே ரிப்போர்ட்" இங்கு மறுபிரசுரஞ் செய்யப்படுகிறது.**

பரந்தனின் மேற்குப் புறமாக பெரிய பரந்தன் பகுதியூடாக புலிகளின் அணியொன்று தாக்குதல் நடத்திக்கொண்டிருக்க, பிரதான தாக்குதல் அணிகள் கிழக்கில் முரசுமோட்டையில் இருந்து பாரிய தாக்குதலை தொடுத்தபடி ஊடறுத்துப் பாய்ந்தன.

அதனால் படையினரின் கவனம் ஒரு திசையில் குவிய முடியாமல் போனது. மேற்குப் புறத் தாக்குதல் பாரியளவில் இல்லையென்றாலும், படையினரின் கவனத்தை திசை திருப்பியது.

முரசுமோட்டை பகுதியில் இருந்து தாக்குதல் தொடுத்த அணிகள் முன்னரங்க காவலரண்களை தகர்த்து, பாதையைத் திறக்க, புலிகளின் அதிரடிப் படையணி உள்ளே ஊடறுத்துச் சென்று பிரதான இலக்குகளைத் தாக்கத் தொடங்கியது.

**வேவு மூலம் துல்லியமான தகவல்கள்**

முன்கூட்டியே வேவு நடவடிக்கைகள் மூலமாகப் பெறப்பட்ட துல்லியமான தகவல்கள் புலிகளின் கையில் இருந்தன.

அதனால் முக்கியமான முன்னரங்க நிலைகள், ஆட்டிலறித் தளங்கள் போன்றவற்றை துரிதகதியில் கைப்பற்றிக் கொள்ள முடிந்தது. இருள் சூழ்ந்த நேரத்தில் துல்லியமான நகர்வுகளை மேற்கொள்ள வேண்டுமானால் வேவுத் தகவல்கள் பிரதானமானவையாகும்.

படையினருக்கு புலிகளின் தேவைப்படும் சில விநாடிகளுக்குள் காவலரண் நோக்கி புலிகள் பாய்ந்து சென்று விடுவர். புலிகளின் வழக்கமான தந்திரம் அதுதான்.

அதே தந்திரத்தை பரந்தன் கிளிநொச்சி காவலரண்களைத் தாக்கவும், ஆட்டிலறித் தளங்களைக் கைப்பற்றவும் புலிகள் பயன்படுத்தி இருக்கலாம்.

கரும்புலிகள் எவராவது தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டதாக புலிகள் இது வரை அறிவிக்கவில்லை. அதனால் ஆட்டிலறித் தளங்களுக்குள் கரும்புலித் தாக்குதல் நடத்தப்பட்டிருக்க முடியாது.

தாக்குதல் ஆரம்பித்த சில மணி நேரங்களுக்குள் பரந்தன் பகுதியில் இருந்த முக்கிய விநியோக மையங்களும், ஆட்லறித் தளங்களும் புலிகளின் கையில் வீழ்ந்தன.

ஆனையிறவு பிரதான தளத்துக்கும் பரந்தனுக்கும் இடையிலான இராணுவ வேலி பிளந்தது. அதனால் ஆனையிறவு தளத்தில் இருந்த படையினர் உதவிக்கு விரைய முடியவில்லை.

தொலைத் தொடர்புகளும் முற்றாக ஸ்தம்பிக்கச் செய்யப்பட்டதால், ஆனையிறவு தளத்தில் இருந்த படையினரால் பரந்தனில் நடப்பதை அறிய முடியவில்லை. ஆனையிறவுத் தளம் நோக்கியும் புலிகள் ஷெல் தாக்குதல்களை நடத்தினார்கள்.

அதே வேளை பரந்தனில் உள்ள முக்கிய நிலைகளை புலிகள் கைப்பற்றிய போதும் கிளிநொச்சி நகரில் இருந்த படையினரின் உதவியுடன் பரந்தனில் நிலை கொண்டிருந்த ஒரு பகுதி படையினர் இணைந்து பதிலடிகளில் ஈடுபட்டனர்.

விமானப்படை விமானங்களும் காலை முதல் உதவிக்கு விரைந்தன.

கிளிநொச்சி நகரில் இருந்தும் ஆனையிறவு தளத்தில் இருந்தும் படையினர் பரந்தன் மையப்பகுதி நோக்கி முன்னேற ஆரம்பித்தனர்.

முன்னேறும் படைகளைத் தாமதப்படுத்திக் கொண்டு; கொண்டு செல்ல முடியாத ஆயுதங்களையும், காவலரண்களையும் நாசம் செய்யும் நடவடிக்கையில் புலிகளின் அணிகள் ஈடுபட்டன.

**ஆட்லறிகளைக் கொண்டு செல்ல முடியாத நிலை**

ஆட்லறிகளைக் கொண்டு செல்ல முடியாத நிலையில் அவற்றை தகர்த்தனர்.

எங்கும் தீப்பிழம்புகள் தோன்றிக் கொண்டிருந்தன. [illegible] இருந்து ஐந்து ஆறு கிலோ மீற்றர் பகுதிகள் புலிகளின் தற்காலிக கட்டுப்பாட்டில் இருந்தன.

ஊடுருவித்தாக்குவதைவிட களத்தில் இருந்து திரும்புவதான் ஆபத்தானது. விமானப்படை விமானங்கள் சுலபமாக இனம் கண்டு தாக்கி விடும்.

பெருந்தொகையான உறுப்பினர்கள் களத்தில் இறக்கப்பட்டதால், அதிக இழப்புக்கள் இல்லாமல் அணிகளைத் திரும்பப் பெறுவதுதான் புலிகளின் முக்கிய நோக்கமாக இருந்தது.

அதனால்தான் ஆட்லறிப் பீரங்கிகளை கட்டி இழுத்து கால தாமதப்பட்டுக்கொண்டிருக்காமல் அழித்துவிட்டு பின்வாங்கினார்கள்.

ஆட்லறிப் பீரங்கிகள் எதனையும் புலிகள் கைப்பற்றவில்லை. 120 எம். எம். மோட்டார் மூன்றும், 50 கலிபர் துப்பாக்கிகள் மூன்றுமே புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் பாரியவையாகும். தானியங்கி துப்பாக்கிகள் நூற்றுக்கணக்கானவையும் ரவைகளும் தம்மால் கைப்பற்றப்பட்டதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

அதேசமயம் முல்லைத் தீவில் கைப்பற்றிய ஆட்லறிகளால் புலிகள் தாக்கியதாக வெளியான செய்திகளும் மிகைப்படுத்தல்தான்.

ஆட்லறிகளைக் கொண்டு சென்று சண்டையிடக் கூடிய களமாக அது அமையவில்லை. ஆட்லறிகளை கொண்டுவந்து தாக்கமுடியுமானால், கைப்பற்றிய ஆட்லறிகளில் சிலவற்றையாவது புலிகள் கொண்டு செல்லவும் முடிந்திருக்கும்.

பரந்தனில் நடைபெற்றது அழித்தொழிப்பு யுத்தம். ஆனால் தாக்குதல் கெரில்லாப் பாணியில் தான் மேற்கொள்ளப்பட்டது.

ஊடுருவி நடத்தும் அதிரடித் தாக்குதல்களில் ஆர். பி. ஜி. ரொக்கட் லோஞ்சர்கள், மோட்டர்கள் மற்றும் இலகுவாக தூக்கிக்கொண்டு நகரக்கூடிய ஆயுதங்களே பயன்படுத்தப்படும்.

வேகமாக முன்னேறவும், துரிதமாக இழப்பின்றிப் பின்வாங்கவும் இலகுவான ஆயுதங்களே வசதியாக இருக்கும்.

மேலும் சண்டைக் களத்தில் புலிகளும் உள்ளே இருக்கும்போது வெளியில் இருந்து கூட ஆட்லறித் தாக்குதல் நடத்த முடியாது. நடத்தினால் புலிகளும் பலியாக வேண்டியதாகிவிடும்.

ஆனையிறவுத்தளம் நோக்கியும், கிளிநொச்சி நகர் நோக்கியும் மோட்டார் ஷெல் தாக்குதல் மட்டுமே புலிகளால் மேற்கொள்ளப் பட்டது.

**படையின்ரை அழிப்பதே நோக்கம்**

மூன்று வகையான யுத்தங்கள் உள்ளன.

- ★ தற்காப்பு யுத்தம்.
- ★ தாக்குதல் யுத்தம்.
- ★ அழித்தொழிப்புயுத்தம்.

முல்லைத் தீவுக்கு அடுத்ததாக புலிகள் திட்டமிட்டு நடத்திய அழித்தொழிப்பு யுத்தம் இது தான்.

ஆனால் முல்லைத்தீவில் பலியான படையினரின் எண்ணிக்கையும், கைப்பற்றிய ஆயுதங்களின் தொகையும் அதிகம்.

பரந்தனில் நடைபெற்ற சண்டையில் புலிகளின் நோக்கம் பெருமளவான படையினரை அழிப்பதாகவே இருந்தது.

பரந்தனில் இருந்து கிளிநொச்சி வரையிலான கிட்டத்தட்ட 10 கிலோ மீற்றர் தூரம் வரை குறைந்தது மூவாயிரம் படையினராவது இருந்திருக்கலாம்.

அதில் பாதிப்பேரையாவது பொறிக்குள் வீழ்த்துவது என்பது தான் புலிகளின் நோக்கம்.

படையினர் தரப்பிலும் பலத்த எதிர்த் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதால் புலிகளின் முழு நோக்கமும் நிறைவேறவில்லை.

ஆயுதங்களை அழித்தொழிப்பதை விட கைப்பற்றுவதே நிரந்தர லாபம். ஆயினும் ஆயுதங்களை முழுதாகக் கொண்டு செல்லக் கூடியதாகள நிலவரமும் அமையவில்லை.

ஆட்லறிகளை புலிகள் கொண்டு செல்லவிடாமல் தடுத்ததில் விமானப்படையினருக்குத் தான் பெரும் பங்கு இருக்கிறது. வான் மூலத் தாக்குதல் இல்லையென்றால் ஆட்லறிகளை புலிகள் நகர்த்திச் சென்றிருப்பர்.

ஆட்டிலறிகள் அத்தனையும் புலிகளின் கைகளில் சென்றிருந்தால் படையினரின் நிலை பெரும்பாடாகி

( 6ஆம் பக்கம் பார்க்க)


## திருமணத் திருமுகம்

மணமகன்:

திருவளர் செல்வன்
**ந. மணிவண்ணன்**
(மணி)

மணமகள்:

திருவளர் செல்வி
**பொ. விசாலாட்சிப்பிள்ளை**
(தவம்)

இடம்: "வித்தகம்" மண்டபம்,
பெரிய மாவடி, சாவகச்சேரி.

காலம்: தாது வருடம் தை 18ஆம் நாள்
வெள்ளிக்கிழமை (31-01-1997)

சுபவேளை :காலை6-30 —7-24 வரை,மகரலக்கினத்தில்.

வித்தக அடியார்கள், தொண்டர்கள், அன்பர்கள் அனைவரையும் இவ்வைபவத்தில் கலந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வித்தகச் செல்வர்

பெரிய மாவடி,
சாவகச்சேரி.
(8/9)


## சங்கீத சற்குருவைப் பாடுவாய்!

ராகம் - மோகனம் தாளம் - ஆதி

பல்லவி

சற்குரு தியாகராஜுவைப் பாடுவாய்!
சற்குரு தியாகராஜுவைப் போலவே!
(சற்குரு)

அனுபல்லவி

ராமனின் நேர்த்தியைச் சாற்றிய ஐயனை
ராகவன் கீர்த்தியைப் போற்றிய மெய்யனை
(சற்குரு)

சரணம்

அன்பென்னும் மலர்களால் ராமனைப் பணிந்தான்;
இன்னருள் பொழியென ராமனை இரந்தான்;
இன்னிசை மலர்களால் ராமனைப் புகழ்ந்தான்;
இன்னுமேன் தடையென ராமனைக் கலந்தான்!
(சற்குரு)

இன்னுயிர்த் துணையென்றுராமனைக் கொண்டான்;
இன்னுயிர்க் குயிரென்று ராமனைக் கண்டான்;
தன்னுயிர் உடல்பொருள் ராமனுக் கென்றான்;
தன்னையே தந்தவன் சரணென்று இணைந்தான்;
(சற்குரு)

- திருமுருகு

(இசைப் பிரம்மம் சற்குரு ஸ்ரீ தியாகராஜசுவாமிகளின் 150 ஆவது ஆராதனைத் திருநாள் இன்றாகும். அதனையொட்டி இக்கவிதை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள C. D 185 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கோகிலா தேநீர்ச்சாலை, கொடிகாமம். (44952)

## தேவை

நல்ல நிலையிலுள்ள ஒரு முச்சக்கர வண்டி [Wheel Chair] தேவைப்படுகிறது. வைத்திருப்போர் சி. மகேசன் அருண் பணிமனை 361, கஸ்தூரியார் வீதி, இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும். (9204)

## கைமாறிவிட்டது

கப்பல் பயணத்தின் போது காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு 1402 இலக்க லொறி மூலம் வரும் போது கறுப்பு நிற சூட்கேஸ் கைமாறி விட்டது. இதில் திருமணத்திற்கென எடுத்து வரப்பட்ட பொருள்கள் அடங்கியுள்ளன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பிரம்மஸ்ரீ சிவகடாட்சக் குருக்கள், தாவடி பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (44950)

## காணி இடாப்பு மீளாய்வு

சண்டிலிப்பாய், ஜன. 28

யாழ்.மாவட்டத்தில் கடந்த சில வருட காலமாக மீளாய்வு செய்யப்படாதிருந்து வந்த காணி இடாப்புகளை மீளாய்வு செய்வதற்கும், கமக்காரர்களுக்கான அடையாள அட்டைகளைப் புதுப்பித்து வழங்குவதற்கும் யாழ். கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஒரு மாத காலத்திற்கு யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கமநல சேவை நிலையங்களிலும் காணி இடாப்புகள் பார்வைக்கு வைக்கப்படும் என்றும் —

இதனை விவசாயிகள் பார்வையிட்டுத் திருத்தங்கள் ஏதாவது செய்யவேண்டி இருப்பின் பெரும்பாக உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு திருத்தங்களைச் செய்துகொள்ள முடியும் என்றும் உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அடையாள அட்டை இதுவரை பெறாத கமக்காரர்களுக்கு புதிய அடையாள அட்டைகளை வழங்கவும் ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. (உ-135)

## விற்பனைக்கு

**தீராந்திகள்**

(Kampas Timber)

2'' × 4'' 2'' × 6''
2'' × 5'' 2'' × 7''

**ஜெசிபா ஏஜென்சி**
**132, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(44891)

# வாழ்த்துகின்றோம்

எமது கல்வி நிறுவனத்தில் கல்வி பயின்று

**ஆண்டு ஐந்து - புலமைப் பரிசில்**

பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்

1. கமலானந்தன் சிந்துஜா
2. சுந்தரலிங்கம் சுஜீத்தா
3. தங்கரத்தினம் செந்தூரன்
4. சின்னத்துரை யசிந்தன்
5. கந்தையா தர்சனா
6. பூபாலசிங்கம் சிந்துஜா

ஆகிய இவர்களோடு இன்னும் சித்தி பெற்ற மட்டுவில் பதி வாழ் மாணவர்கள் அனைவரையும் மனமார வாழ்த்தி நிற்கின்றோம்.

மட்டுவில் தெற்கு,
வளர்மதி கல்வி நிலையம் (44948)

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 02 — 04 — 1913

உதிர்வு: 09 — 02 — 1996

சமூக ஜோதி
அமரர்
## சிவக்கொழுந்து இராஜேந்திரன்
(பிரபல சட்டத்தரணியும், சமாதான நீதிவானும்)

**திதி: 28 - 01 - 1997**

அப்பா நின், அன்புதவழ் பேச்செங்கே!
அனைவருக்கும் ஆசிதரும் பண்பெங்கே!
இன்பமொடு இனித்திடும் சொற்பொழிவு எங்கே!
துன்பமெலாம் துடைத்திடும் சேவை எங்கே!
நற்பழகு புன்சிரிப்பின் முகமும் எங்கே!
நானிலத்தில் நின் முகத்தைக் காண்பதெங்கே?

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

''சிவ வில்வா''
மானிப்பாய். (44860)

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 22 — 01 — 1928

மறைவு: 09 — 02 — 1996

## அமரர் சதாசிவம் கனகலிங்கம்

**திதி: 28-01-1997**

அன்புத் துணைவராய் பாசமிகு தந்தையாய்
எமக்கு நல்வழி காட்டிய அன்புத் தெய்வமே!
நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும்
உங்கள் அன்பு நினைவலைகள்
எம்மை விட்டு நீங்காது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

— குடும்பத்தினர்

நவரத்தின ராஜா வீதி,
கோண்டாவில். (சி/02)

பண்டத்தரிப்பு
## பரிஷ் ப. நோ. கூ. சங்கம்
# முக்கிய அறிவித்தல்

பிரதான வீதி பண்டத்தரிப்பிலுள்ள மின்தறி ஆலை தலைமை அலுவலக மேற்கூரை வேலைகள் செய்வதற்கு கூலிக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. சகல பொருள்களும் சங்கத்தால் வழங்கப்படும். கூறு விலை சமர்ப்பிப்போர் இடங்களை நேரடியாகவும் பார்வையிட்டு தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு திங்கட்கிழமை **03-02-97** நண்பகல் 12 மணிக்கு முன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**பொது முகாமையாளர்,**
பண்டத்தரிப்பு,
பரிஷ் ப. நோ. கூட்டுறவுச் சங்கம்,
பண்டத்தரிப்பு.

(சி/10)

# பாராட்டுகள்

யா/பண்ணாகம்
## மெய்கண்டான் மகாவித்தியாலயம்
**ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சை - 1996**

எமது பாடசாலையில் கல்வி கற்று மேற்படி பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் முன்னெப்போதுமில்லாத வகையில் இம்முறை பதினான்கு (14) மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள். இப்பெறுபேறு சங்கானைக் கல்விக் கோட்டத்திலேயே மிகச் சிறந்ததாகவும் முதலாவதாகவும் திகழ்கின்றது. இதற்கு மூலகாரணமாக இருந்த அதிபர் அவர்களுக்கும் மற்றும் பல சிரமங்களின் மத்தியிலும் மிகுந்த கவனத்துடன் பிரத்தியேக வகுப்புக்களை நடத்திய ஆசிரியர் குழாமிற்கும் இதன் மூலம் பயன்பெற்ற மாணவர்களுக்கும் எமது மனமார்ந்த பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாணவர் பெயர்கள்

1. ச. தாசன்
2. ம. விவேகானந்தா
3. ச. சுகன்யா
4. ச. சாரங்கன்
5. வ. தவராசா
6. வி. கிருஷ்ணகுமரன்
7. து. பிரநாத்
8. வி. துவாரகன்
9. கு. பிரதீபா
10. சி. அஜந்தன்
11. பா. மகிபன்
12. க. கிரிதரன்
13. மு. மயூதரன்
14. செ. கங்காசினி

**வாழ்த்துவோர்:**
பாடசாலை அபிவிருத்திச் சங்கமும்
பழைய மாணவர் சங்கமும்.

(44951)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## திருமதி நாகமுத்து மாணிக்கம்மா

மண்ணில்: 12–11–1919

விண்ணில்: 29–12–1996

ஓடியது ஒரு திங்கள் நீங்கள் மறைந்து
மாறவில்லை உங்கள் நினைவு மனதை விட்டு

அன்னாரின் மரணச்சடங்கில் பங்குபற்றியோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (28-01-1997) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய வைபவத்தில் கலந்து அன்னாரின் ஆத்மசாந்தியின் பொருட்டு பிரார்த்திப்பதுடன் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

47, அத்தியடி புது வீதி,
யாழ்ப்பாணம். (44930)

# திருமறைக்கலாமன்றம்

நடத்தும்

# சிற்பக் கண்காட்சி

**(28-01-1997) இன்றைய இறுதிநாள் நிகழ்வும், சிற்பக்கலைஞர் கௌரவிப்பும் சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றோம்.**

**இடம்: மறைக்கல்வி நிலையம்.**

## இரத்தினா ஸ்ரோர்ஸ்

287, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம். (44949)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் பிரதமர் மீது ஊழல் குற்றச்சாட்டு

டெல் அவிவ், ஜன. 28

இஸ்ரேலியப் பிரதமர் நத்தனியாகு தனது நெருங்கிய அரசியல் சகா ஒருவரை அரசியல் குற்றச்சாட்டிலிருந்து விடுவிப்பதற்காக தனது மற்றொரு நெருங்கிய சகாவை சட்டமா அதிபராக நியமிக்க முயன்றார் என்ற குற்றாச்சாட்டுக் குறித்துப் புலன் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

தற்காலிக சட்ட மா அதிபராகச் செயலாற்றும் அரசாங்கத் தலைமை வழக்கறிஞர் திருமதி எட்னா ஆவல் இதனைத் தெரிவித்தார்.

தேசிய நலனைக் கருத்தில் கொண்டு நத்தனியாகுவின் அரசாங்கத்துக்கு எதிரான இந்தத் குற்றச்சாட்டைக் கூடிய விரைவில் விசாரிப்பது நல்லது என அவர் தெரிவித்தார்.

குற்றச் சாட்டுக்கள் நிருபிக்கப்படுமாயின் நத்தனியாகு பதவியில் இருந்து இறக்கப்படுவார் என அவரது அமைச்சரவை உறுப்பினர்கள் சிலர் தெரிவித்தனர்.

(இ-10)

## 12 கோடி ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த டைனஸோர்

லண்டன், ஜன 28

12 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த புதிய வகையான மாமிசம் உண்ணும் டைனஸோர் ஒன்றின் புதைபடிவங்களைக் கண்டு பிடித்திருப்பதாக பிரிட்டிஷ் அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது மிகப்பயங்கர மான ஓர் உயிரினம் எனவும் சுமார் ஒரு தொன் எடையுடையதாக விருந்தது எனவும் மிகக்கூடிய கூரிய பற்களும் பெரிய தாடையும் உடையதாக இருந்ததெனவும் வேகமாக ஓடக்கூடியதாகவும் இருந்ததெனவும் அவர்கள் கூறுகின்றனர்.

'நியூ வென்ரர்' கிலரி' என்ற இந்த உயிரினத்தின் முதலாவது புதைபடிவத்துண்டு 1978 இல் இங்கிலாந்தின் தெற்கிலுள்ள அயிலர்ஸ் வைற் என்ற இடத்தில் மலைச்சரிவொன்றில் கண்டெடுக்கப்பட்டது.

தற்போது கிட்டத்தட்ட முழு எலும்புக் கூட்டையும் இணைக்குமளவுக்கு போதியளவு துண்டுகளை ஒன்றிணைத்துவிட்டதாக அறிவியலாளர்கள் கூறுகின்றனர்.

## பலஸ்தீனரின் வீடுகள் தரைமட்டம்

இஸ்ரேலின் மேற்குக் கரையில் கட்டப்பட்டிருந்த பலஸ்தீனர்களுக்குச் சொந்தமான வீடுகளை இஸ்ரேல் இராணுவத்தினர் நேற்று முன்தினம் உடைத்துத் தரைமட்டமாக்கினர்.

அந்த வீடுகள் சட்ட விரோதமாகக் கட்டப்பட்டவை என இஸ்ரேலிய இராணுவ அறிவிப்பாளர் தெரிவித்தார்.

உரிய அனுமதியின்றிக கட்டப்பட்ட சுமார் 700 பலஸ்தீனர்களின் வீடுகளை இஸ்ரேலிய இராணுவம் இதுவரை அழித்துள்ளது.

## நிரந்தர உறுப்பு நாடுகளாக மூன்றாவது உலக நாடுகள்

### கொபி அனான் ஆதரவு

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடுகளாக மேலும் அதிக மூன்றாவது உலக நாடுகளைச் சேர்த்துக் கொள்ளுவதற்கு ஐ. நா. தலைமைச் செயலர் கொபி அனான் தனது வலுவான ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்படுவது மாறுபடும் உலக நிலையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் என தனது மூன்று நாள் அமெரிக்க விஜயத்தை முடித்துக் கொண்டு திரும்புகையில் அவர் வாஷிங்டனில் தெரிவித்தார்.

(இ-10)

## பெண் அமைச்சரின் நியமனம்: அமெரிக்க செனட் ஏற்றது

வாஷிங்டன், ஜன. 28

திருமதிமட்லீன்ஒல்பிறைட் அமெரிக்க வெளியுறவு அமைச்சராக நியமிக்கப்பட்டதை சபை அங்கீகரித்தது.

ஐ.நா.வில் அமெரிக்கத் தூதுவராகப் பணியாற்றிய இவரது பூர்வீகம் செக்கோஸ்லாவக்கியா ஆகும்.

2ஆம் உலகப் போரின் அவலங்களை நேரில் கண்டவர் இவர். கம்யூனிஸ்டுகள் பிறேக் நகரைக் கைப்பற்றிய போது இவரது குடும்பம் அமெரிக்கா சென்றது. அப்போது இவருக்கு வயது 12 ஆகும்.

இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் மாக்கிரட் தட்சருக்குப் பின்னர் உலகின் மிகச் சக்திவாய்ந்த பெண்மணியாக 59 வயதான இவர் விளங்குகிறார்.

அதிகார வரிசையில் ஜனாதிபதி, உப ஜனாதிபதி, மக்களவை சபாநாயகர் ஆகியோருக்கு அடுத்ததாக நான்காவது முக்கிய பதவி வெளியுறவு அமைச்சர் பதவி ஆகும்.

''அமெரிக்கா மெத்தனமாக இருந்தால் அதன் உலகத் தலைமைத்துவம் பலவீனமடைந்துவிடும். அமெரிக்கா உலகத் தரம் வாய்ந்த இராஜ தந்திர மற்றும் பாதுகாப்பு முறையை நிலைநாட்டுவது அவசியம்'' என அவர் தெரிவித்துள்ளார்.

(இ-10)

## எதிரும் புதிருமாக இருந்த நாடுகள் இணைந்து விளம்பரம்

வாஷிங்டன், ஜன. 28

இதுவரை எதிரும் புதிருமாக இருந்து வந்த இஸ்ரேல், ஜோர்தான், பலஸ்தீனம் போன்ற நாடுகள் கடந்த வெள்ளியன்று அமெரிக்கப் பத்திரிகைகளில் இணைந்து முழுப்பக்க விளம்பரங்களை வெளியிட்டன.

அமெரிக்க உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் நோக்கில் வெளியிடப்பட்டுள்ள இந்த விளம்பரங்களில் 'அமைதி அது ஒரு கண்கொள்ளாக் காட்சி' எனக்கொட்டை எழுத்துக்களில் அச்சிடப்பட்டுள்ளது.

ஹெப்ரோன் குறித்து பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் உடன்பாடு கைச்சாத்தாகி ஒருவாரத்துக்குள் வெளிவந்துள்ள இந்த இணை விளம்பரங்கள் இரு நாடுகளுக்கிடையேயான உறவினை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-10)

## சிறுவரை சவூதிக்கு கடத்திச் சென்று பணம் சம்பாதிக்கும் மோசடி

### மேற்கு வங்காளத்தில் பொலீஸார் விசாரணை

கல்கத்தா, ஜன. 28

இந்தியாவில் இருந்து சிறுவர், சிறுமியரைக் கடத்திச் சென்று சவூதி அரேபியாவில் பிச்சை எடுக்க வைத்து பணம் சம்பாதிக்கும் மோசடிக்கும்பல் குறித்து மேற்கு வங்காள மாநில காவல்துறையினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த மோசடி வேலையை நடத்தி வந்ததாகக் கூறப்படும் இரண்டு இந்தியர்களை கல்கத்தாவில் காவல்துறையினர் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாதம் 13 ஆம் திகதி சவூதி அரேபியாவின் வீதிகளில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த 75 இந்தியச் சிறுவர், சிறுமிகளை அந்நாடு இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பியிருந்தது.

இவ்வாறான மேலும் 40 சிறுவர் சிறுமியர் இந்தியாவுக்கு அனுப்பப்படவுள்ளனர்.

5 வயது முதல் 15 வயது வரையான இவர்களில் அதிகமானோர் பெண்கள் எனவும் —

ஏறக்குறைய எல்லோருமே உடல் ஊனமுடையவர்கள் எனவும் —

இவர்கள் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த மர்சிதாத் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் — காவல் துறையினரின் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

(இ-10)

## உலக அரங்கில்

## கிழக்கு ஜெருஸலத்தை இஸ்ரேல் விட்டுக் கொடாது

டெல் அவிவ்: ஜன. 28

கிழக்கு ஜெருஸலத்தை தலைநகராகக் கொண்டு பலஸ்தீன தனிநாடு அமைக்கும் யஸீர் அரபாத்தின் திட்டத்தை முறியடிக்கும் முயற்சியாக இஸ்ரேல் அரசு கிழக்கு ஜெரூஸலத்தை தனது பிடியிலிருந்து விடாது பார்த்துக் கொள்ளும் முயற்சிகளில் தீவிரமாக இறங்கியுள்ளது.

இஸ்ரேலில் இருந்து எவராலும் எப்பொழுதும் பிரிக்கவே முடியாது என யூதர்களினால் நம்பப்படும் கிழக்கு ஜெரூஸலேமின் அபிவிருத்திக்காக இஸ்ரேல் சுமார் 15 கோடி ரூபா பெறுமதியான தொகையை ஒதுக்கி உள்ளது.

வெளிநாட்டு அரசியல் நடவடிக்கைகள் எவையும் அங்கே நடைபெறாமல் பார்த்துக் கொள்ளும் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் இஸ்ரேல் அங்கு அதிகரித்துள்ளது.

(இ-10)

## யெல்ட்ஸினில் தங்கவில்லை

வாஷிங்டன், ஜன. 28

ரஷ்ய அரசாங்கத்துடனான அமெரிக்க உறவுகள் சுகவீனமுற்றிருக்கும் ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்ட்ஸினில் தங்கியிருக்கவில்லை என அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் திருமதி மடலின் ஆல்பிறைற் தெரிவித்திருக்கிறார்.

(இ-10)

# ஐரோப்பாவுக்கு என்று அழைத்துச் சென்று நடுக் கடலில் விடும் பிரயாண முகவர்கள்

## பணத்தை மட்டுமல்ல உயிரையும் இழக்கும் சட்ட விரோத குடியேற்றக்காரர்

**வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி லட்சக் கணக்கான பணத்தைக் கறந்து விட்டு பயணிகளை நட்டாற்றில் கைவிடும் முகவர்களின் நடவடிக்கைகள் தற்போது அதிகரித்து வருகின்றன. இது குறித்து பி. பி- சியின் சிங்கள சேவையில் அண்மையில் இடம் பெற்ற கண்ணோட்டத்தின் தொகுப்பை இங்கே தருகின்றோம்.**

சட்ட விரோதமாக ஆட்களை ஏற்றிச் சென்ற கப்பல் ஒன்று கடந்த டிசம்பர் 24 ஆம் திகதி இரவு மத்திய தரைக் கடலில் மூழ்கியது.

எகிப்திலுள்ள அலெக்சாந்திரியா துறைமுகத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற போது சிசிலிக்கும் மோல்டாவுக்கும் இடையில் கடலில் மூழ்கிய அக் கப்பலில் இந்தியா, சிறிலங்கா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 283 பேர் இருந்தனர் என உயிர் தப்பியோர் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தோரின் சடலங்களோ அல்லது மூழ்கிய கப்பலின் பாகங்களோ இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. மேலும் இந்த விபத்துக்கான காரணம் என்ன என்பதும் இதுவரை தெளிவாகத் தெரியவில்லை.

இந்த விபத்து தொடர்பாக கிறீஸ் நாட்டைச் சேர்ந்த மூவருக்கு எதிராக கிறீஸ் நீதி மன்றத்தில் கொலைக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

**ஐரோப்பா செல்ல பல்வேறு தந்திரங்கள்**

உயிரை துச்சமென மதித்து ஐரோப்பா செல்ல பல்வேறு தந்திரங்கள் கையாளப்படுகின்றன.

வருடமொன்றுக்கு சுமார் 5 இலட்சத்திலிருந்து 10 இலட்சம் வரையானோர் சட்ட விரோதமாக ஐரோப்பிய நாடுகளுக்குள் ஊடுருவுகிறார்கள் என நம்பப்படுகிறது.

இவர்களில் பெரும்பாலானோர் வட ஆபிரிக்க மத்திய கிழக்கு மற்றும் இலங்கை இந்தியா ஆகிய நாடுகளில் இருந்தே செல்கின்றனர்.

இவர்களது பயணத்தின் போது உயிரை மாத்திரமின்றி சட்டவிரோத முகவர்களுக்கு இவர்கள் செலுத்திய பணத்தையும் இழக்க நேரிடுகிறது.

''இதனை ஒரு பாரதூரமான பிரச்சினை என்றே நாங்கள்கருதுகிறோம். கடந்த 4 அல்லது 5 ஆண்டுகளில் இது மிகவும் அதிகரித்துள்ளது இது விரைவாக அபிவிருத்தியடைந்து வரும் தொழிலாக அமைந்து வருவதே இது எவ்வளவு தூரம் பாரதூரமானது என்பதை வெளிக்காட்டுகிறது.

**இலாபமூட்டும் தொழில்**

பிரயாண முகவர்களுக்கு இது நல்ல லாபம் தரும் தொழிலாகும்.

(6ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு:கஜனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவினைக்கு இடம் அளிக்காத தீர்வு திட்டத்துக்கே ஐ.தே.க. ஆதரவு

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜன 28

''நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு இடமளிக்காத வகையில் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் அமுல் செய்யப்படுமானால் ஐக்கியதேசியக் கட்சி அதை ஆதரிக்கத் தயாராக உள்ளது.''

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

''பொது மக்கள் ஐக்கிய முன்னணி முன்வைத்திருக்கும் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் குறித்து தமிழ், முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகளுடனும் பொது மக்களுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுவருகின்றன.

''இந்த அதிகாரப் பரவலாக்கல் யோசனையில் எழுபது சதவீதமான விடயங்கள் குறித்து நாம் எமது இணக்கப்பாட்டைத் தெரிவித்துள்ளோம்.

''பிராந்திய சபைகளில் நிறைவேற்றுக் குழுமுறை அமுல்செய்யப்பட வேண்டும் எனஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்த யோசனையை நாடாளுமன்றத்தெரிவுக் குழு ஏற்றுக் கொண்டுள்ளது ஒரு நல்ல அறிகுறி ஆகும்.

''இந்த நாட்டின் சகல இன மக்களும்ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் இருக்குமேயானால் அவற்றுக்கு முழுமையான ஆதரவை வழங்க ஐக்கிய தேசியக் கட்சி தயார்.''

இப்படி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறினார்.

(இ-10)

# புதிய பாட அட்டவணைப்படி இம்முறை உயர்தரப் பரீட்சை

கொழும்பு, ஜன. 28

ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சை இந்தவருடம் முதல் தடவையாக புதிய பாட அட்டவணைக்கு ஏற்ப நடத்தப்படவுள்ளது.

36 பாடங்களுக்கான புதிய பாட அட்டவணைகளும் ஆசிரியர் கைநூல்களும் ஏற்கனவே பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன என்று தேசியக் கல்வி நிறுவனத்தின் வெளியீட்டுப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பொருளியல், கணக்கியல், வர்த்தகப்புள்ளி விவரங்கள் போன்ற பாடங்களின் இரண்டாவது பகுதிக்கான பாட அட்டவணைகள் விரைவில் வெளியிடப்படும்.

இதற்கிடையில் புதிய பாட அட்டவணைகளை இன்னமும் பெற்றுக்கொள்ளவில்லை என பல பாடசாலை அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

விநியோகத்திலுள்ள காலதாமதமே இதற்குக் காரணம் என தேசியக் கல்வி நிறுவனம் தெரிவித்துள்ளது.

(இ-10)

# ஐரோப்பாவுக்கு என்று...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் இதில் முதலிடும் தொகை மிகவும் குறைவு. ஆனால் அபரிமிதமான லாபத்தை அவர்கள் பெறுகிறார்கள்.

முகவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு எந்தவித ஆபத்தும் இல்லை என்றே கூறலாம்.

சோவியத் யூனியன் சிதறுண்ட பின்னர் இவ்வாறு ஆள்களைக் கொண்டு சென்று இறக்குவதற்கான பிரதேசங்கள் அதிகரித்துள்ளன.

மேற்கத்தைய நாடுகள் குடிவரவுச் சட்டங்களை இறுக்கத் தொடங்கியதும் இவ்வாறு சட்டவிரோதமாக குடியேற முயல்பவர்கள் தங்கள் பயணங்களைப் பாதுகாப்பாக அமைப்பதற்காக முகவர்களுக்கு அதிக பணத்தை வழங்குகிறார்கள்.

ஆனால் இவர்கள் வழங்கும் பணம் இவர்கள் சென்றடையும் இடத்தை உறுதிப்படுத்தாது'' இவ்வாறு ஜெனிவாவில் உள்ள சர்வதேச இடம்பெயர்வோர் அமைப்பின் தலைவர் மார்கிறோ கிறாமின் தெரிவிக்கிறார்.

**நத்தார் காலமே பொருத்தமான காலம்**

''இவ்வாறு சட்டவிரோதமாக குடியேறுவதற்கு மிகப் பொருத்தமான காலம் நத்தார் காலமாகும்.

அண்மையில் ஹங்கேரி — ஆஸ்திரியா எல்லையில் அமைந்துள்ள குழியொன்றில் மிகக் கொடிய குளிரில் இவ்வாறான 8 பயணிகளைச் சந்திக்க நேர்ந்தது.

இவர்களில் நால்வர் ஈராக்கையும் இருவர் லிபியாவையும் இருவர் அல்ஜீரியாவையும் சேர்ந்தவர்கள்.

இவர்கள் ஆளுக்கு ஆயிரத்து 500 டொலர்களைச் செலுத்தி துருக்கியில் ஒரு லொறி ஒன்றில் ஏறினார்கள்

அந்த லொறிக்காரன் இவர்களை இவ்வாறு ஹங்கேரியில் நடுத்தெருவில் விட்டுவிட்டுச் சென்றுள்ளான்.

''உங்களை ஜேர்மனிக்கு கொண்டுவந்துள்ளேன். இறங்குங்கள் ''என லொறிக்காரன் கூறி அவர்களை இறக்கிவிட்டுள்ளான்'' இவ்வாறு சட்டவிரோதப் பயணங்களுக்கு முக்கிய மார்க்கமாக அமைந்துள்ள ஹங்கேரியில் இருந்து பி.பி.சி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இவ்வாறு சட்டவிரோதமாக இவர்கள் ஐரோப்பிய நாடுகளில் குடியேற முயற்சிக்கையில் இந்தப் பயணங்களை அமைத்துக் கொடுக்கும் முகவர்களின் வாழ்க்கை செழிப்பாக அமைகிறது.

ஒழுங்கமைந்த குற்றக் கும்பல்களும் இந்த முயற்சியில் இணைந்து செயற்படுவதாகத் தெரிகிறது.

இந்தக் கும்பல்கள் பல நாடுகளுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு ஐரோப்பா செல்லலாம் என்ற ஆர்வத்தைத் துண்டிவருகின்றன.

ஸ்பெயினுக்கும் மொறொக்கோவுக்கும் இடையேயான 20 கிலொ மீற்றர் கடலைக் கடப்பதற்கு சிலர் ஆளுக்கு 2 ஆயிரத்து 500 டொலர்களை அறவிடுகிறார்கள்.

தற்போது ஐரோப்பாவை வந்து சேர்வது என்பது கனவுக்கு ஒப்பானது.

பல்வேறு ஆபத்துக்களுக்கும் முகம்கொடுத்து ஐரோப்பிய நாடுகளின் குடிவரவுச் சட்டங்களில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி சட்டவிரோத குடியேற்ற வாசிகள் தொடர்ந்து முயற்சிப்பது இக்காரணத்தாலே ஆகும்.

ஜெனிவாவில் உள்ள சர்வதேச இடம்பெயர்வோர் அமைப்பின் தலைவர் மார்கிறோ கிறாமின் மீண்டும் தெரிவிக்கையில் ''இப்படியான குடியேற்றக்காரர்களுக்கு ஐரோப்பிய நாடுகள் ''தண்ணிபட்டபாடு''என்றார்.

எத்தனை முறை திருப்பி அனுப்பப்பட்டாலும் மீண்டும் மீண்டும் திரும்பிவருகிறார்கள்.

''சில சந்தர்பங்களில் அவர்கள் தென் ஐரோப்பிய நாடுகளான இத்தாலி, கிறீஸ், ஸ்பெயின் ஊடாக ஆஸ்திரியாவுக்குள் அல்லது ஜேர்மனிக்குள் நுழைகிறார்கள்.

''எவ்வாறாயினும் ஒருவாறு ஐரோப்பாவுக்குள் நுழைவதே அவர்களது எண்ணமாகும். இவர்களில் பலர் ஜேர்மனிக்குள் நுழையவே விரும்புகிறார்கள் என்றும் அவர் கூறினார்.''

**கடுமையான குடி வரவு சட்டங்கள்**

பொருளாதார நோக்குடன் அகதி அந்தஸ்தைப் பெறுவதைத் தடுக்கும் நோக்கில் மேற்கு ஐரோப்பிய நாடுகள் தங்கள் குடிவரவுச் சட்டங்களைக் கடுமையாக்கியுள்ளன. சொந்த நாடுகளில் நிலவும் கஷ்டங்கள் காரணமாக மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழைவது இவர்களுக்கு கடினமாக உள்ளது.

விமான மூலம் குறித்த இடத்துக்கு அழைத்துச் செல்வதாக கூறி லட்சக் கணக்கில் பணத்தைக் கவரும் முகவர்களின் கொடிச் செல்லும் ஐரோப்பா கனவு தற்போது மத்திய தரைக் கடலலே விளங்குகிறது. ★

# கொழும்பிலிருந்து கொண்டு வந்த மருந்தை 2 நாள்களுக்குள் பெற்றுக் கொள்ளக் கோரிக்கை

## யாழ். ஆங்கில மருந்தகங்களுக்கு

யாழ்ப்பாணம், ஜன. 28

கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட மருந்து வகைகளை இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். ஆங்கில மருந்தகங்களை யாழ். ஆங்கில மருந்து வணிகர் மன்றம் கேட்டுள்ளது.

யாழ். ஆங்கில மருந்து வணிகர் மன்றம் இது தொடர்பாக விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது மன்றத்தினால் அரசாங்க மருந்துக்கூட்டுத்தாபனத்திடம் கொள்வனவு செய்யப்பட்ட மருந்து வகைகளை கொழும்பு மொத்த விலைக்கே இங்குள்ள மருந்தகங்களுக்கு வழங்குவது தெரிந்ததே.

எமது மருந்து விநியோக காலம் நீண்டு கொண்டு செல்லும் போது நாம் பல பொருளாதார பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

எஸ். பி. சி. நிறுவனத்தில் மருந்துக்கான முழுப் பணத்தையும் உடன் செலுத்தி மருந்தைப் பெற்றுக் கொண்டோம்.

இப்பணம் மன்றத்தினுடையதல்ல. தனியார் வர்த்தகரிடம் கை மாற்றாக வாங்கியது.

ஆகவே ஆங்கில மருந்தகங்களுக்கான முதலாம் கட்ட மருந்து வகைகளை எதிர் வரும் 30 ஆம் திகதியுடன் விநியோகித்து முடிக்க உள்ளோம். அதற்குள் அனைத்து மருந்தகங்களும் பெற்றுக் கொள்ளும்படியும் —

பெற்றுக் கொள்ள தவறினால் அதற்கு நாம் பாத்திரவாளிகள் அல்ல என்பதையும் தெரிவிக்கவிரும்புகின்றோம்.

மிகுதி மருந்து வகைகள் அனைத்தையும், விரும்பிக் கேட்கும் மருந்தகங்களுக்கு கொடுத்து எமது விநியோகத்தை நிறுத்தவுள்ளோம்.

இப்படித்தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## நுகர்வோர் பாதுகாப்புக்குழு

கொழும்புத்துறை, ஜன. 28

கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்கான நுகர்வோர் பாதுகாப்புக் குழு கடந்த 22 ஆம் திகதி பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

(இ-30)

## நீடிப்பு

சண்டிலிப்பாய், ஜன. 28

யாழ். நகரிலிருந்து சுன்னாகம் ஊடாக இளவாலை வரை நடத்தப்பட்டு வந்த வடபிராந்திய போக்குவரத்து சபையின் பஸ் சேவை மாதகல் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

(உ-135)

# நீண்ட நிலப்பரப்புக்களைக்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கும்.

அழித்தொழிப்பு யுத்தம் என்ற ரீதியில் பார்க்கும் போது பரந்தன் சமர் புலிகளுக்கு வெற்றிதான்.

ஆயினும் புலிகள் தரப்பில் 140 பேர் பலியாகி இருப்பிதும், நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்திருப்பதும் புலிகளுக்கும் தாக்கமுள்ள இழப்புத்தான்.

புலிகளால் பெருந்தொகையான ஆயுதங்கள் அழிக்கப்பட்டாலும்கூட, மீண்டும் அவற்றைப் பெறுவது அரசாங்கத்திற்கு சிரமமான காரியமல்ல.

எனவே ஆயுத அழிப்பு மூலம் அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்தியிருப்பதாக கருதலாமே தவிர, படையினரின் படைக்கல பலத்தில் நிரந்தர வீழ்ச்சி ஏற்படுத்தப்பட்டதாக கூறமுடியாது.

ஆனால் படையினர் தரப்பில் 223 படையினர் (அரச தகவல்படி) பலியாகி இருப்பது படையினருக்கு உளவியல் ரீதியிலும், ஆட்பல ரீதியிலும் தாக்கம் ஏற்படுத்தும் விடயம்தான்.

ஆனால் நாடெங்கும் படையினரின் மொத்த ஆட்பலத்தையும், புலிகளின் மொத்த ஆட்பலத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால், புலிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்பும் புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை சம தாக்கமுடையதுதான்.

ஆயினும் யுத்த தந்திர ரீதியில் பல முக்கிய நோக்கங்களை முன்வைத்தே பிரபாகரன் இத்தாக்குதலை நடத்தியிருக்கிறார்.

புலிகளின் வன்னித் தளத்திற்குள் மூக்கை நீண்டிக் கொண்டிருப்பது போலவே கிளிநொச்சி நகரில் படைகள் நிலைகொண்டுள்ளன.

நீண்டநிலப்பரப்பில் நிலைகொண்டிருப்பது சுலபம் எனவும் கருதி படையினர் மேலும் முன்னேறிச் செல்ல முனையலாம்.

வன்னித் தளத்தை கைப்பற்றும் திட்டங்களையும் விரைவுபடுத்தலாம். எனவே நீண்ட நிலப்பரப்புக்களில் நிலை கொண்டிருப்பது எத்தகைய ஆபத்தானது என்பதை படையினருக்கு உணர்த்துவதும் புலிகளின் தாக்குதலின் நோக்கம்.

**பிரபாகரனின் தந்திரோபாயம்**

''படையினர் யுத்தத்தை ஆரம்பிக்க முன்னர் அவர்களை தேடிச்சென்று நாம் யுத்தத்தை ஆரம்பிக்க வேண்டும்'' என்பதே பிரபாகரனின் நீண்டகால தந்திரோபாயமாக இருக்கிறது.

இந்த ஆண்டு வன்னியில் படையினர் பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்றுக்கு தயாராகலாம் என்று கருதப்படுவதால், அவர்கள் கோட்டைக்குள்ளேயே புகுந்து அதிர்ச்சி கொடுப்பதும் பிரபாகரனின் திட்டம்.

நீண்ட நிலப்பரப்புக்களை கைப்பற்றுவது படை பலம் பெருமளவாக உள்ள படையினருக்கு சாத்தியம்தான். ஆனால் கெரில்லாக்களின் திடீர்ப்பாய்ச்சல்களில் இருந்து அவற்றைப் பாதுகாப்பது சுலபமானதல்ல.

கிழக்கில் ''றிவிஜெய'' மூலம் படையினர் 97இல் கால்வைத்தனர். ஆனால் றிவிஜெயவில் படையினர் முன்னேறிக் கொண்டிருக்க, அங்கிருந்து தமது ஒரு படை அணியை வடக்குக்கு அழைத்தார் பிரபாகரன்.

கிழக்கில் புலிகளை படையினர் தேடிக்கொண்டிருக்க, அங்கிருந்து வந்த படையணிகள் பரந்தன் சமரில் குதித்தன.

97 ஆம் ஆண்டுக்கான தாக்குதலை புலிகள் வடக்கில் இருந்து தொடங்கிவைத்துள்ளனர். 140 புலிகளை இழந்த போதும், புலிகளின் அணிகள் உற்சாகம் பெறத்தக்க தாக்குதலாக அது அமைந்துள்ளது.

அதே நேரம் நீண்ட நிலப்பரப்புக்களை கைப்பற்றி நிலைகொள்ளும் படையினரின் தந்திரோபாயம் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.

புலிகளின் தாக்குதலை முறியடித்து விட்டதாக படைத்தரப்பு கூறுகிறது. ஆனால் புலிகளின் நோக்கம் ஊடுருவித் தாக்கி அழித்து விட்டு திரும்புவதுதான்.

கைப்பற்றிய பகுதிகளில் நின்று புகைப்படம் எடுத்துச் கொண்டுள்ளனர் புலிகள் 10 ஆட்லறிகளை தாம் அழித்ததாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது. ஆனால் ஆட்லறிகளின் அருகே நின்று புகைப்படங்களை எடுத்துக் கொண்டதாகவும் அவற்றை அழிக்கும் காட்சிகளைக் கொண்ட புகைப்படங்கள் மற்றும் வீடியோ காட்சிகளை பதிவு செய்துள்ளதாகவும் புலிகள் கூறியுள்ளனர்.

யுத்த வெற்றியை மையமாக வைத்து இந்த ஆண்டில் அரசாங்கம் போட்டிருந்த அரசியல் வியூகங்களுக்கும் பரந்தன் சமர் முதலடியாக அமைந்துள்ளது.

ஆனால் அரசாங்கம் தனது பின்னடைவை ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. அடுத்த பெரும் தாக்குதல் ஒன்றுக்கு அரசாங்கம் தயாராகக் கூடும். அந்த நடவடிக்கையில் அரசாங்கம் வெற்றியும் பெறக்கூடும். ஆனால் அந்த வெற்றியை தக்கவைத்துக் கொள்ள புலிகள் அனுமதிப்பார்களா?

புலிகளை முற்றாக ஓரம் கட்டி விட்டு, இலங்கையில் சமாதானத்தை தோற்றுவிக்கலாம் என்று அரசாங்கம் கூறுவதை உலகம் அவநம்பிக்கையோடு நோக்கத் தொடங்கிவிட்டது.

ஏனெனில், முன்னைய காலங்களைவிட கெரில்லா தாக்குதல் உத்திகளிலும், பலத்திலும் புலிகள் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள். அதனால் கைப்பற்றிய நிலப்பரப்புக்களின் அளவீடுகளைகாட்டி மட்டும் புலிகளை பலவீனமாக்கிவிட்டதாக சொல்வது உகந்த வாதமாக இருக்காது ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கிளை வேண்டும்

முன்னாள் சிறைச்சாலை ஆணையாளர் சி. ரி. ஜான்ஸ் தலைமையில் இயங்கும் மனித உரிமைகள் செயலணிக் குழு கலைக்கப்பட வுள்ளது. ஆகையால் யாழ்ப்பாணத்தில் இம் மாதத்தில் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட அந்தச் செயலணிக் குழுவின் கிளைக்கு ''அம்போ'' வாகி விட்டது.!

யாழ்ப்பாணத்தில் கண்டபடி கைது செய்யப்படுவோர், காணாமற் போவோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகளை அடுத்தே மனித உரிமைகள் செயலணிக் குழுவின் கிளையை நிறுவ ஏற்பாடாகி இருந்தது. குழுவின் தலைவரும் உறுப்பினர் ஒருவரும் கடந்த வருட இறுதியில் இங்கு விஜயம் செய்திருந்தனர். மீண்டும் இம் மாதத்தில் இங்கு வந்து கிளையைத் திறந்துவைக்க ஏற்பாடு செய்யப்படும் எனத் தெரிவித்தனர். அதற்கான பூர்வாங்க வேலைகளிலும் அவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழு ஒன்றை அமைப்பதற்கான சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. ஆகையால் செயலணிக்குழு தேவையில்லை என்று கருதியே அதனைக் கலைப்பதற்கு முடிவு செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

ஆனால் சட்டப்பிரகாரமான மனித உரிமைகள் ஆணைக்குழு எப்போது உருவாக்கப்படும்? ஆணைக்குழு உறுப்பினர்கள் எப்போது நியமிக்கப்படுவர்? ஆணைக்குழு தனது பணிகளைச் செய்வதற்குத் தேவையான பணியாளர்கள் எப்போது திரட்டப்படுவர்? அது எப்போது இயங்கத் தொடங்கும்? இவற்றிற்கு இப்போது பதில்கள் தெரியாது.

ஆணைக்குழு இயங்கத் தொடங்குவதற்கு முன்னரே செயலணிக் குழுவைக் கலைத்து விடுவது வரவேற்கப்படக் கூடிய செயலல்ல. ஆணைக்குழு இயங்கத் தொடங்கும் வரையாவது செயலணிக்குழு தனது பணிகளைத் தொடர்வதற்கு வசதி செய்யவேண்டும்.

இரண்டில் எது நடந்தாலும், யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் பற்றிய விவகாரத்தைக் கையாள்வதற்கான கிளை அலுவலகம் உடனடியாக இயங்கத் தொடங்கும் என்று நம்ப முடியவில்லை.

இதனால் யாழ்ப்பாண மக்கள் பெரிதும் ஏமாற்றம் அடைவர் என்பதில் சந்தேகம் இல்லை. கண்டபடி கைதும், காணாமற்போதலும் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றன. நாளாந்த அலுவல்களின் நிமித்தம் வீட்டைவிட்டுப் புறப்படுவோரும் சில சந்தர்ப்பங்களில் திரும்பிவருவதில்லை.

ஆகக்குறைந்தது அவர்களுக்கு என்னாயிற்று, எங்கிருக்கின்றார்கள் என்பதனைக் கூட அறிவது சம்பந்தப்பட்டோரின் பெற்றோர், உறவினர்களுக்குப் பெரும் கஷ்டமாகவுள்ளது.

அதனால் —

மனித உரிமைகள் விவகாரத்தைக் கையாளும் அலுவலகம் ஒன்று உடனடியாக யாழ்ப்பாணத்தில் தேவை. எந்த விடயத்திலும் நோய் வருவதற்கு முன்னர் தடுத்தலே புத்திசாலித்தனம்; அதுவே நற்பயன் தரும். மனித உரிமைகள் காப்பாற்றப்படுவதில் அந்த அணுகுமுறையையே அரசு தவறாது கடைப்பிடிக்க வேண்டும்.

# பதவி ஏற்ற கையோடு கடற்படை பலத்தை அதிகரிக்க தளபதி திட்டம்

## விரைவில் உயர் மட்ட மாநாடு கூட்டுகிறார்

கொழும்பு, ஜன. 28

இலங்கைக் கடற்படையின் புதிய கடற்படைத் தளபதியாக வைஸ் அட்மிரல் சிசில் திஸேரா நேற்று பதவியேற்றிருப்பதை அடுத்து —

கடற்படையினரின்பலத்தை அதிகரிப்பது, கடற்படையின் பலவீனங்கள் — குறைபாடுகள் போன்றவற்றைக் களைவது ஆகியவை குறித்து ஆராய்ந்து முக்கிய முடிவுகளை எடுப்பதற்காகக் கடற்படையின் உயர்மட்ட மாநாடு ஒன்று விரைவில் நடைபெறும் என கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்போது யுத்தக் கப்பல்கள், தாக்குதல் கப்பல்கள், பீரங்கிக் கப்பல்கள் என சுமார் 60 கலங்கள் மட்டுமே கடற்படையிடம் உள்ளன.

இலங்கைக் கடற் பிரதேசத்தில் பூரண கடற் கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்ளத் தேவையான கடல் வலிமை இலங்கைக் கடற்படைக்கு இல்லை. அவ்வாறு பூரண கண்காணிப்பை மேற்கொள்வதாயின் கடற்படையிடம் உள்ள கடற்கலங்களின் எண்ணிக்கையை இரண்டு மடங்காக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளின் விநியோகப் பாதை வடக்கு — கிழக்கு கடல் பிரதேசமே. அங்கு தொடர்ந்து தமது பலத்தை புலிகள் தக்க வைத்துள்ளனர் எனக் கொழும்பில் பாதுகாப்புச் செய்தியாளர் ஒருவர் கூறுகின்றார்.

இதனிடையே —

இலங்கைக் கடற்படைக்குப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சிற்பக் கண்காட்சி

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் ஆதரவில் யாழ். மறைக்கல்வி நிலையத்தில் கடந்த சனிக்கிழமை தொடக்கம் நடைபெற்று வரும் கலைஞர் அ. வி. ஆனந்தனின் சிற்பக் கண்காட்சியின் இறுதி நாள் நிகழ்ச்சிகள் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளன.

இன்று பிற்பகல் கண்காட்சி முடிவில் சிற்பக் கலைஞர் அ. வி. ஆனந்தன், யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவார்.

கலைஞர் அ. வி. ஆனந்தனின் சிற்பங்களைக் கொழும்பிலும் காட்சிப்படுத்தும் நடவடிக்கைகளை யாழ். திருமறைக் கலாமன்றம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-51)

# 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சை: கிடைத்த மற்றும் சில பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஜன. 28

கடந்த செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளில் முந்திக் கிடைத்த பாடசாலைகள் சிலவற்றின் பெறுபேறுகள் 22-1-97 உதயனில் வெளியாகி இருந்தன.

இதுவரை கிடைத்த மற்றும் சில பெறுபேறுகள் வருமாறு:-

★ கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம் — 5 பேர்

★ ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை - ஒருவர்.

★ கொக்குவில் மேற்கு சி. சி. த. க. பாடசாலை — 6 பேர்.

★ நல்லூர் சென். பெனடிக்ற் பாடசாலை — 15 பேர்,

★ வண். நாவலர் மகா வித்தியாலயம் — 2 பேர்.

★ இளையதம்பி இந்து வித்தியாலயம் — 2 பேர்.

★ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை — 2 பேர்.

★ அத்தியார் இந்துக்கல்லூரி — 3 பேர். (தோற்றியோர் 10 பேர்)

★ உடுவில் மகளிர் கல்லூரி — 23 பேர்.

★ இணுவில் மத்திய கல்லூரி — 10 பேர்.

★ இணுவில் இந்துக்கல்லூரி — 6 பேர்.

★ இராமநாதன் கல்லூரி - 7 பேர்.

★ கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை — 4 பேர்.

★ உடுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை 2 பேர்.

★ சங்குவேலி தமிழ்க்கலவன் பாடசாலை — 3 பேர்.

★ உடுவில் மல்வத்தை றோமன் கத்தோலிக்க பாடசாலை — ஒருவர்.

★ சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம் — 4 பேர்.

★ சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயம் — 7 பேர்.

★ மகாஜனாக் கல்லூரி — தெல்லிப்பளை — 13 பேர்.

★ தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளி — 6 பேர்.

★ அளவெட்டி வடக்கு அ. மி. த. க. பாடசாலை — 2 பேர்.

★ அளவெட்டி அருணோதயாக்கல்லூரி — ஒருவர்.

★ நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை — 27 பேர் (தோற்றியோர் — 70 பேர்).

★ கட்டைவேலி ஞானாசாரியார் கல்லூரி — 9 பேர்.

★ கரணவாய் தாமோதர வித்தியாலயம் — 8 பேர்.

★ உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி — 7 பேர்.

★ கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம் — 7 பேர்.

★ கரவெட்டி திரு இருதயக் கல்லூரி — 6 பேர்.

★ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி 5 பேர்.

★ கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயம் — 5 பேர்.

★ கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி — 5 பேர்.

★ வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம் — 3 பேர்.

★ கம்பர்மலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை — 3 பேர்.

★ கரணவாய் மணியகாரன் தோட்ட வித்தியாலயம் — 2 பேர்.

★ கரவெட்டி மேற்கு நாவலர் தமிழ் வித்தியாலயம் — 2 பேர்.

★ துன்னாலை காசிநாதர் வித்தியாலயம் — 2 பேர்.

★ துன்னாலை தெற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை — 2 பேர்.

★ கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம் — 2 பேர்.

★ அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம் — 2 பேர்.

★ வதிரி வடக்கு மெ. மி. பாடசாலை, கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம், கட்டைவேலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை, வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி ஆகியவற்றில் தலா ஒருவர்.

★ நாகர்கோயில் மகாவித்தியாலயம் — ஒருவர்.

★ மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை — ஒருவர்.

★ பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி — 24 பேர் (தோற்றியோர்- 87 பேர்).

★ தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் — 13 பேர் (எஸ். அன்றூ யாழ் மாவட்டத்தில் முதலாமிடம்)

★ புலோலி புற்றளை மகா வித்தியாலயம் — 11 பேர்.

★ மேலைப் புலோலி சிவப்பிரகாச வித்தியாலயம் — 7 பேர்.

★ தம்பசிட்டி மெ. மி. பாடசாலை — 5 பேர்.

★ புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை — 4 பேர்.

★ துன்னாலை மேற்கு அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை — 5 பேர்.

★ அல்வாய் மேற்கு திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம் — 2 பேர்.

★ கற்கோவளம் மெ. மி. பாடசாலை — 2 பேர்.

★ கெருடாவில் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை — 2 பேர்.

★ வல்வெட்டித்துறை றோமன்கத்தோலிக்கப் பாடசாலை — 2 பேர்.

★ பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம், அல்வாய் வடக்கு இந்து தமிழ்க்கலவன் பாடசாலை, புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலை, தட்டாதெரு மெ. மி. பாடசாலை, வல்வெட்டித்துறை அமெரிக்க மிஷன் பாடசாலை, தொற்றாவத்தை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயம், தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளையார் வித்தியாலயம் ஆகியவற்றில் தலா ஒருவர் சித்தி அடைந்துள்ளனர்.

★ சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி — 4 பேர் (தோற்றியோர் 34 பேர்)

★ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை — 27 பேர் (தோற்றியோர் - 116 பேர்)

★ சாவகச்சேரி மகளிர் கல்லூரி — 7 பேர் (தோற்றியோர் - 16 பேர்)

★ மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் — 6 பேர் (தோற்றியோர் - 53 பேர்)

★ மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம் — 2 பேர் (தோற்றியோர் - 33 பேர்)

★ மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம் — 7 பேர் (தோற்றியோர் - 38 பேர்)

★ மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம் — 7 பேர் (தோற்றியோர் - 24 பேர்).

★ சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம் — ஒருவர். (தோற்றியோர் - 11 பேர்)

★ மட்டுவில் தெற்கு அமெரிக்கமிஷன் கலவன் பாடசாலை — ஒருவர் (தோற்றியோர் - 19 பேர்)

★ நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயம் — 12 பேர். (தோற்றியோர் - 23 பேர்)

★ கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாலயம் — 6 பேர். (தோற்றியோர் 10 பேர்)

★ கைதடி - நுணாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை — 4 பேர். (தோற்றியோர் - 19 பேர்)

★ கைதடி முத்துக்குமாரு வித்தியாலயம் — ஒருவர்.

★ நாவற்குழி மகாவித்தியாலயம் — 4 பேர்.

★ மறவன்புலோ சகலகலா வித்தியாலயம் — ஒருவர். (தோற்றியோர் - 11 பேர்)

★ அல்லாரை அ. த. க. பாடசாலை — 3 பேர்.

★ கச்சாய் அ. த.க. பாடசாலை — 3 பேர் (தோற்றியோர் — 18 பேர்)

★ கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் — 2 பேர். (தோற்றியோர்-24 பேர்)

★ கொடிகாமம் அ. த. க. பாடசாலை — 2 பேர். (தோற்றியோர் - 23 பேர்)

★ வரணி மகாவித்தியாலயம் — ஒருவர் (தோற்றியோர் - 13 பேர்)

★ மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம் — ஒருவர் (தோற்றியோர்-12 பேர்

★ இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம் — 2 பேர் (தோற்றியோர் - 18 பேர்)

★ உசன்இராமநாதன் மகாவித்தியாலயம் — 5 பேர் (தோற்றியோர் - 26 பேர்)

★ எழுதுமட்டுவாழ் அ. த. க. பாடசாலை — 2 பேர் (தோற்றியோர் - 21 பேர்)

★ எழுதுமட்டுவாழ் சி. சி. தமிழ்க்கலவன் பாடசாலை —2 பேர் (தோற்றியோர்-6 பேர்.)

★ வரணிவடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை — 3 பேர். (தோற்றியோர் - 9 பேர்)

★ நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம் — ஒருவர் (தோற்றியோர் - 14 பேர்)

★ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை — 4 பேர்

★ மானிப்பாய் சென். ஆன்ஸ் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை — 8 பேர்

★ சுதுமலை வடக்கு த. க. பாடசாலை — 2 பேர்

★ ஆனைக்கோட்டை அமெரிக்கமிஷன் பாடசாலை — ஒருவர்

★ மானிப்பாய் சோதிவேம்படி பாடசாலை — 3 பேர்

★ மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை — 5 பேர்.

★ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்— 15 பேர்

★ கொழும்புத்துறைஇந்து மகாவித்தியாலயம — 4 பேர் (தோற்றியோர் — 21 பேர்

## நாளை

**தை 16**

**புதன்கிழமை**

திதி: பஞ்சமி காலை 6. 59வரை

நட்சத்திரம்: அத்தம் முன் இரவு 10.19வரை.

ராகுகாலம்: 12 36-2 06

[illegible]: 5.06-6.36

பகலுக்கும் இரவுக்கும்

[illegible] (நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதம் தரித்த கொள்ளையர் தென்னிலங்கையில் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 28

ஆயுதம் தரித்த கொள்ளைக் கோஷ்டிகளின் நடவடிக்கைகள் தென்னிலங்கையில் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியிருக்கின்றன.

கடந்த சனியன்று வெள்ளவாயய — மொனறாகலை வீதியில் சென்ற சிகரெட் வான் ஒன்றை ஆயுத முனையில் வழிமறித்த இரு இளைஞர்கள் வானில் இருந்தோரிடமிருந்து 3 லட்சத்து 68 ஆயிரம் ரூபாவைக் கொள்ளையிட்டுச் சென்றனர்.

(உ-150)

## பதவி...

( 7 ஆம் பச்கத் தொடர்ச்சி )

போர்க் கப்பல் திருத்தும் இரண்டு நிலையங்களே உள்ளன. ஒன்று காலியில். மற்றையது திருகோணமலையில்.

எனினும் அவை நவீன வசதிகளைக் கொண்டவையல்ல. பழைய வடிவில் அமைந்தவை.

இந்த நிலையங்கள் நவீனமயப்படுத்தப்பட வேண்டும்; அங்குள்ள வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும்; அங்கு பணியாற்றும் பொறியியலாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும்.

இத்தகைய நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமே கடற் படைப் பலத்தை அதிகரிக்க முடியும்.

1995 - 1996 ஆம் ஆண்டுகளில் 12 கப்பல்களை இலங்கைக் கடற்படை இழந்துள்ளது — இவ்வாறு அந்தச் செய்தியாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (உ-150)

## முல்லைத்தீவில் மீனவர் சடலம் கரைஒதுங்கியது

கொழும்பு, ஜன. 28

முல்லைத்தீவு, அம்பலவன் பொக்கணை கடற்பரப்பில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் மீனவர் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியுள்ளது.

முல்லைத்தீவைச் சேர்ந்த கணேஷ் என்பவரின் சடலமே அது என்று தெரிவிக்கப்பட்டது. (இ-4)

விநாயகர் துணை

# வாழ்த்துகின்றோம்

யா/ மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை
ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை 1996 இல் சித்தியடைந்த

1. வயிரமுத்து தனுஜா
2. இராசதுரை கஜதர்சினி
3. திருவாஞ்சீஸ்வரன் சொருபன்
4. முருகவேள் செந்தூரன்
5. கிறேசியன் நிர்மல்

ஆகிய இம் மாணவர்களை வாழ்த்துகின்றோம். இம் மாணவர்களின் உயர்வுக்காய் உழைத்த அதிபர், ஆசிரியர்களுக்கு எமது மனம் நிறைந்த பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோம்.

**மாணவர்கள், பெற்றோர்,**
**பழைய மாணவர் சங்கம்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.**

(44959)

# உடுவில் மகளிர் கல்லூரி

கடந்த வருடம் புரட்டாதி மாதத்தில் நடைபெற்ற ஆண்டு- 5 புலமைப் பரிசில் பரீட்சையில சித்தியெய்திய 23 மாணவர்களையும் பிற மாவட்டங்களிலிருந்து தோற்றிச் சித்தியெய்திய ஏனைய எமது மாணவர்களையும் பாராட்டுவதில் பெருமையடைகின்றோம்.

அத்துடன் இம்மாணவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் மனதாரப் பாராட்டுகின்றோம்.

பெற்றோர், பழைய மாணவர் சங்கம்,
உடுவில் மகளிர் கல்லூரி.

(சி/14)

யாழ். மாவட்ட

# பேக்கரி உரிமையாளர் சங்கம்

## தேவை

## பாதுகாப்பு உத்தியோகத்தர்

யாழ்ப்பாணத்தில், 39, 3 ஆம் குறுக்குத்தெருவில் அமைந்திருக்கும் எமது தலைமைச் செயலகத்திற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.

**கல்வித்தகைமைகள்:-** ஆகக் குறைந்தது க.பொ.த சாதாரணதரம்.

**வயது:-** 35 முதல் 55 வரை.

**சம்பளம்:-** பேசித் தீர்மானிக்கப்படும்.

சிபார்சு செய்யக் கூடிய உறவினரல்லாத இருவரின் நற்சான்றிதழ்களுடனும், சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடனும் 3-2-97 திங்கட்கிழமை காலை 10.00 மணியிலிருந்து 1.00 மணி வரையில் நேரில் வரவும்.

**குறிப்பு:-** யாழ். மாநகரசபை எல்லைக்குள் இருப்பவராக இருத்தல் விரும்பத்தக்கது.

ந. பாலவிநாயகர்,
மாவட்ட செயலாளர்

யா.மா.பே.உ. சங்கம்
39, 3 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(சி/11)

## கப்பல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாயின் புதிதாக விண்ணப்பிக்க வேண்டியிருக்கும் என யாழ். சிவில் நிர்வாக அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## தெற்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னதும் ஆதரவு எமக்குத் தேவை. எனவே அவற்றில் ஒன்றை ஆதரித்து மற்றையதைப் பகைத்துக்கொள்ள நாம் விரும்பவில்லை — என்றார் தமிழ்க்கட்சித் தலைவர் ஒருவர்.

தேர்தலில் பங்குபற்றப் போவதில்லை என்று அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் அறிவித்துள்ளார்.

இத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிடாது என்று கூறிய அக்கட்சியின் எம்.பியான நீலன் திருச்செல்வம், யாரை ஆதரிப்பது என்பது குறித்து இதுவரை முடிவு எடுக்கப்படவில்லை என்றும் சொன்னார்.

ஏனைய தமிழ்க் கட்சிகளும் இதே பாணியிலேயே பதில் அளித்தன. (உ-150)

## விமானங்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்தார் விமானப்படைத் தளபதி ஏயர்வைஸ் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க.

அவர் மேலும் கூறியதாவது:-

தற்போது விமானப்படை விமானங்கள் தினசரி 2 ஆயிரம் துருப்புகளையும் ஐம்பது தொன் பொருள்களையும் ஏற்றி இறக்குகின்றன.

யுத்தத்தில் இழப்புகள் தவிர்க்க முடியாதவை. இலங்கையில் மட்டுமல்ல, உலகம் முழுவதிலும் யுத்தத்தில் இழப்புகள் ஏற்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. படையினர் உயிரிழக்கின்றார்கள்; விமானங்கள் சுட்டு வீழ்த்தப்படுகின்றன; கப்பல்கள் மூழ்கடிக்கப்படுகின்றன; டாங்கிகள் நொறுக்கப்படுகின்றன.

அதற்காக இந்தக் கருவிகளைப் பூட்டி வைத்து விடுவதில்லை; அல்லது யுத்தத்தை விட்டு ஓடி விடுவதில்லை.

கடந்த வாரம் கூட இஸ்ரேலில் F 15 ரக விமானம் வீழ்ந்து நொறுங்கியது. அதன் பெறுமதி ஆறு கோடி டொலர்களாகும்.

எம்மில் பிழை கண்டு பிடிப்பவர்களின் உயிரைக் காப்பாற்றவே எமது படையினர் தங்களது உயிர்களைத் தியாகம் செய்து வருகின்றார்கள்.

நான் தளபதியாகப் பதவியேற்ற சமயம் விமானப் படையில் எண்பது விமானிகளே இருந்தனர். குறுகிய காலத்தில் அவர்களில் 14 பேரை நாம் இழந்தோம். தற்போது இருநூறு பேர் விமானிகளாகப் பயிற்சி பெற்றுவருகின்றார்கள். அடுத்த ஆண்டில் அவர்கள் முழுப் பயிற்சியையும் பெற்று விடுவார்கள். ஒரு விமானியைப் பயிற்றுவிக்க இரண்டு வருடங்கள் எடுக்கின்றன.

விமானப் படையை நவீனமாக்கும் கட்டத்தில் நாம் உள்ளோம். எலக்ட்ரோனிக் யுகத்துடன் நாம் முன்னேற வேண்டும்.

விமான இழப்புகள் குறித்து எம்மீது குறை கூறுபவர்களை எண்ணும் போது சிங்களப் பழமொழி ஒன்றுதான் எனக்கு நினைவுக்கு வருகின்றன.

'கழுவுபவர்களின் கைகளால் தான் பீங்கான்கள் உடைகின்றன; சாப்பிடுபவர்களின் கைகளால் அல்ல' — என்பது தான் அந்தப் பழமொழி,

விமானங்களையும் விமானிகளையும் இழப்பது துரதிர்ஷ்டவசமானவையே, ஆனால [illegible]

இப்படி அவர் கூறினார். (இ-150)

# எலிஸெபத் இறங்குதுறை 30 வருட குத்தகைக்கு!

கொழும்பு, ஜன. 28

கொழும்புத் துறைமுகத்தின் எலிஸெபத் இறங்குதுறையை முப்பது வருட குத்தகைக்கு வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு வழங்க அமைச்சரவை முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

அமைச்சரவைக்குள் இந்த விவகாரம் குறித்து புனர்வாழ்வு, புனரமைப்பு, கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள் அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப்புக்கும் தொழில், தொழில்ப பயிற்சி அமைச்சர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் பெரும் கருத்து முரண்பாடு ஏற்பட்டதாகவும் தெரியவருகின்றது.

சம்பந்தப்பட்ட தொழிற் சங்கங்களின் ஆலோசனையைப் பெறாமல் இந்த விடயத்தில் ஒரு தலைப்பட்சமாக முடிவு எடுப்பதால் பெரும் அமைதியின்மை ஏற்படும் என அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ கூறினார்.

அத்தகைய நிலைமையைச் சமாளிக்கலாம்; அதனால் பெரிதாக ஏதும் ஏற்படப் போவதில்லை — என்று அமைச்சர் அஷ்ரப் சமாதானம் கூறினாராம். (உ-150)

# தேர்தல் சமயம் பொலீஸாரிடம் ரூ.10 லட்சம் வழங்கினார் குரே

## பொலீஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

கிழக்கில் தேர்தல் சமயம் தேர்தல் வேலைகளுக்காக பத்து லட்சம் ரூபா பணத்தை அப்போதைய அமைச்சர் சிறிசேன குரே பொலீஸ் அதிகாரிகளிடம் வழங்கினார்.

— இவ்வாறு கூறினார் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் (எஸ்.எஸ்.பி.) முகமட் ரூபின்.

கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தல்களின் போதும் அதன் பின்னர் பொதுத் தேர்தலின் போதும் இடம் பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் குறித்து விசாரணை செய்து வரும் ஜனாதிபதி ஆணைக்குழுமுன்னிலையில் சாட்சியமளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

1994 பெப்ரவரியில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் சமயம் இலங்கை மின்சார சபையின் அம்பாறைப் பகுதி அதிகாரிகள் விடுதியில் ('சேர்கியூட் பங்களா'') வைத்து அப்போதைய அமைச்சர் சிறிசேனகுரே கட்டுக் கட்டாகப் பணத்தை ஒப்படைத்தார்.

பணமிருந்த சூட்கேஸ் அமைச்சரின் வாகனத்திலிருந்து எடுத்து வரப்பட்டு மேசையில் வைக்கப்பட்டது. அமைச்சர் பணநோட்டுக்களை எடுத்து சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் டக்ளஸ் பீரிஸ், பொலீஸ் அத்தியட்சகர் மாகீத் ஆகியோரிடம் கையளித்தார். அவர்கள் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டனர். தேர்தல் வேலைகளுக்காக இவ்வாறு பணம் பெறுவது ஒழுங்கீனமானது என்பது எனக்குத் தெரியும் — என்றார்.

## மரணதண்டனை

ஜெயக்குமார் என்ற புகைப் படப் பிடிப்பாளர் பருத்தித்துறைப் பகுதியில் உள்ள தமது வீட்டுப் பகுதியில் வைத்து சனிக்கிழமை மாலை 6 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

உளவுப் பிரிவுடன் தொடர்பு வைத்து தமது இயக்கப் போராளிகளையும் ஆதரவாளர்களையும் காட்டிக்கொடுத்ததற்காக இவருக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டதாக புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டது. (உ)

## திருகோணமலையில் போயா..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனை ஆட்சேபித்து உடன் நடவடிக்கை எடுத்து சந்தையைத் திறந்து வைக்குமாறு கோரி திருகோணமலை நகரசபைத் தலைவர் கே. சூரியமூர்த்தி பொலீஸாரிடம் முறைப்பாடு செய்தாராயினும் பொலீஸார் சந்தைக்குச் சென்று நிலைமையைப் பார்வையிட்ட பின் ஒன்றும் செய்யாமால் திரும்பி விட்டனர் என்றும் கூறப்படுகின்றது,

இந்தப் பின்னணியில் நேற்றுபிற்பகல் 1.00 மணிக்கு திருமலை நகரசபை அதன் தலைவர் தலைமையில் கூடியது.

போயா தினங்களில் சந்தையை மூடும்படி கோரி கிழக்கு சிங்கள அமைப்புகளால் அனுபபி வைக்கப்பட்ட இரு கடிதங்கள் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த விடயம் குறித்து நகரசபைத் தலைவர் சூரியமூர்த்தி கூட்டத்தில் கூறியதாவது:-

சந்தையை மூடியது சட்டவிரோதமான செயல். தெற்கில் போயா தினங்களில் சாதாரண சந்தைகளுக்கு மேலதிகமாக — விசேடமாக — 'போயா சந்தைகளே' நடத்தப்படும் போது திருமலை சந்தையை மூட வேண்டியது ஏன்? அதை அனுமதிக்க முடியாது. சந்தையை அத்தினத்தில் இயங்க வைக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் நகரசபை வேறு ஓர் இடத்தில் சந்தையை நடத்தும் நிலைதான் வரும்.

இந்த விடயம் குறித்து ஜனாதிபதி செயலகம் கூட்டும் மாநாடு சில தினங்களில் நடைபெறவுள்ளது. அங்கு எழுத்து மூலமன்றி வேறு வகையில் தரப்படும் எந்த உறுதிமொழியையும் நான் ஏற்கப் போவதில்லை.

அங்கு முன்வைக்கப்படும் எந்த யோசனையையும் நகரசபை அங்கத்தவர்கள் முன்வைத்து அவர்களின் அங்கீகாரம் பெற்ற பின்பே அத்தகைய யோசனைகளுக்கு இணக்கம் தெரிவிப்பேன் — என்றார். (உ-150)

## திருகோணமலையில்.

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அரசு ஏதாவது செய்தாக வேண்டும்; துரிதமாகச் செயற்பட்டு தீர்க்கமாக முடிவு எடுத்து அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-150)

## மீசாலையில்...

(1 ஆம் பக்சத் தொடர்ச்சி)

ஞாயிறு பகல் ஒரு மணி அளவில் மீசாலை டச் வீதியில் இச் சம்பவம் நடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-4-10-117)

## ஈ பி ஆர்.எல்.எவ்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழுவினர் வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகில் வீடு ஒன்றில் தங்கி செயற்பட்டு வருவதும் தெரிந்தவையே.

ரெலோ குழுவினர் இன்னும் யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு உடனடியாக யாழ்ப்பாணத்தில் அலுவலகம் திறக்கும் நோக்கம் கிடையாது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேட்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்கள துபணிமனையில் 28 - 01 - 1997 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org